குமாரமங்கலம் கொக்கரிப்பு!

Phone No. 450
விலை அணா ஒன்று

Regd. No. M. 5458
(இலங்கை—10 சதம்)

மாலை மணி

ஆசிரியர்: C. N. அண்ணாதுரை M.A. MALAI

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மணி 1 | சென்னை (11—11—49) வெளியீடு (12—11—49) | இதழ் 88

தி[illegible]டநாடு பிரச்னை கண்டு கலக்கம்

துயில் களைந்தவர் துடிதுடிக்கிறார்

அரசியல் ஒழுக்கமற்ற டாக்டர் சுப்பராயனின் அங்கலாய்ப்பு!

"இது வரட்டுக் கூச்சலும் அபத்தமானதும் ஆகும். வானத்தில் ஓடி மறையும் மேகம்போல்தான் அவர்கள் கோரிக்கை. அது ஒருகாலும் நிறைவேறாது. இந்தியாவைப் பிரிக்க, சென்னை சர்க்காரும், இந்திய சர்க்காரும் சம்மதிக்காது."

"நீதியாக நடந்து நியாயமான கோரிக்கைகளை விரும்பியதால் காங்கிரஸ் சர்க்கார் சுதந்திரம் பெற்றது. திராவிட கழகத்தார் கூச்சலிட்டதின் பயனாக திராவிட ஆட்சி ஏற்படாது மறைந்தது."

—டாக்டர் சுப்பராயன்—

சென்னை நகரை விழுங்கி விட, விதவிதமாகப் பேசி வரும் ஆந்திரர்களின் அக்கிரமப் போக்கைக் கண்டிக்கச் சென்னையில் கூட்டப்பட்டக் கூட்டத்தில், அரசியல் ஒழுக்கத்தின் அதிகார உருவுள்ள டாக்டர் சுப்பராயனின் திருவாயிலிருந்து சிலசில சொல் முத்துக்கள் தெரித்திருக்கின்றன. சென்னை நகருக்கு உரிமையுடையவர்கள் தமிழர்கள்தான் என்று நமது முன்னேற்றக் கழகத்தின் கருத்தைப் பலமுறை சந்தேகத்திற்கிடமில்லாமல், விளக்கிக்கூறி இருக்கிறோம். சென்னைப் பிரச்னையைக் குறித்துப் பேச நேர்ந்த சந்தர்ப்பத்தில், நமது கழகக் கோட்பாட்டை வலிய வம்புக்கிழுத்துப் பேச வேண்டிய அவசியம் எவருக்கும் இருக்க வேண்டியதில்லை. ஆனால் அந்த அவசியம் சுப்பராயனுக்கு மட்டும் ஏற்பட்டு விட்டு இருக்கிறது!

ஆந்திரர்கள் சென்னையை கோரும் பிரச்னை முடிவில் பயன் விளையாது என்று சொல்ல வந்த குமாரமங்கலம் மிட்டாதார், 'திராவிடஸ்தான்' பிரச்னைபோல ஆந்திரர் கோரிக்கையும் பிசுபிசுத்துப் போகும் என்று உவமை காட்டி, நமது கோரிக்கைக்கு ஆரூடம் கணிக்கிறார். வெண்மேகம் போல நமது கோரிக்கையும் மறைந்தொழிந்துவிடும் என்று ஜோசியம் சொல்லுகிறார் சோதிடத்தில். இவர் நிபுணராக இருந்தால் இவருடைய எதிர்கால வாழ்விற்கும் எந்தக் கட்சிக்கும் இனி தொடர்பேற்பட இருக்கிறது என்பதை—பிறர் அறியக் கூறாவிட்டாலும்—தனக்குத் தானேயாகவாவது கண்டுணர்ந்து கொள்வது நல்லது. அதற்கேற்ப, தமது சொற்களைத் தூதாக அனுப்ப ஆயுதம் செய்து கொள்வதற்காவது, அது உதவியாக இருக்கலாம். பிறர் விஷயத்திலே தமது திறமையைக்காட்ட முனைவது, வெறும் கேலிக்கூத்துதான் என்பதை, இவர் அடுத்தடுத்து எடுத்த அரசியல் பிறவிகளை அறிந்திருப்பவர்கள், வெகு சுலபமாகப் புரிந்துகொண்டு விடுவார்கள்.

மேகம் என்றாலே என்ன என்று 'டாக்டர்' பட்டம் பெற்றுள்ளவருக்கே புரியாமல் பேசுகிறார். ஆரம்பத்தில் வெண்மையாக இருக்கிற மேகம் நாழிகைகூடக் கூட கனத்த மழை பொழியும் கார்முகிலாக மாறுவதை குமாரமங்கலத்தார் அறியாமல் இருக்க நியாயமில்லை. பதவியும் இழந்து விட்டு, மீண்டும் பதவிகிடைக்கலாம் என்ற நம்பிக்கையும் இடையில் வெட்டப்பட்டு, இன்று அந்த பதவிப் பிரச்னையே அடியோடு கைவிடப்பட்டு, கருத்திழந்து கிடக்கும் நிலையில் டாக்டருக்குத் தெளிந்த மூளை எப்படி இருக்கமுடியும்? கிழப் பருவம் கோட்டையிலிருந்து சொக்கரித்துப் பார்க்கும் குமாரமங்கலத்தாரிடம், நாம் கோபித்துதான் என்னபயன் ஏற்படப்போகிறது!

திராவிடநாடு வேண்டுமென்று நாம் பிரசாரம் செய்வதின் காரணமாகத்தான், நாம் ஆட்சிப்பீடத்தைக் கைப்பற்ற முடியாமல் போய்விட்டு இருக்கிறோம் என்று, கொலம்பஸ் பணிபுரிந்து பார்க்கிறார் குமாரமங்கலத்தார். அவரைப் போலவே நம்மையும் எண்ணிக்கொண்டார் போலும்! பதவியிலே பாசத்தை வைத்துக்கொண்டு, அதனைக் கொண்டு தரும் சக்தியுள்ள பதங்கள் எதுவென்று தேடிப் பிடித்து, அவசியமற்ற இடத்திலும்கூட அந்தப் பதங்களைப் பிரயோகித்துப் பார்க்கிறார் பதவிப் பிரியர் டாக்டர் சுப்பராயன்!

காங்கிரஸ் கோரின சுதந்திரக் கோரிக்கை நியாயமானதாகவும், அதனைப் பெற நீதியாகவும் நடந்து கொண்டதாலதான், காங்கிரஸ் சர்க்கார் சுதந்திரம் பெற்றது என்றும் சரித்திரம் சொல்லுகிறார்! தண்டவாளத்தைப் பெயர்த்தும் தந்திக்கம்பியை அறுத்தும் தபால் பெட்டியில் தீவைத்தும் கூட அகிம்சா தர்மத்திற்கு உயிர் கொடுத்தோம் என்று டாக்டர் கூறினாலும், அதில

[தொடர்ச்சி 3-ம் பக்கம் பார்க்க]

பணமில்லை! :: :: பணமில்லை!

குஷ்டரோக விடுதி கட்ட முடியாது?

தாம்பரத்திற்கருகிலுள்ள மாம்பாக்கத்தில் ஒரு குஷ்டரோக நிவாரண விடுதி கட்ட திட்டமிடப்பட்டிருந்தது. ஆனால் அரசாங்கத்தாரிடம் பணம் இல்லாமையால், அந்த விடுதியைக் கட்டவேண்டாமென்று சென்னை அரசாங்கம் நகராண்மைக் கழகக் கமிஷனருக்கு அறிவித்துவிட்டது. எனவே, சென்னை அரசாங்கத்திடம், கல்விக்குப் பணமில்லை; வைத்தியத்திற்குப் பணமில்லை; மக்கள் நலன் கருதிய பிறபணிகளுக்குப் பணமில்லை. பின் எதற்குத்தான் பணமிருக்கிறதோ! தெரியவில்லை. மக்கள் தரும வரிப் [illegible] ஆனால் நன்மைகளோ நாளுக்குநாள் சுருங்குகிறது.

விலைகளைக் குறைக்க முடியாது

குறைத்தால் கள்ளமார்க்கட் பெருகும்

(0)

காங்கிரஸ் நிபுணர் கூறுகிறார்

நாடு முழுவதிலும் உணவுப் பொருள்களின் விலைவாசிகளைக் குறைத்துவிட்டால் கள்ளமார்க்கெட் வழிகள் குறைவதற்குப் பதிலாக, அதிகம் ஆகும் என்று காங்கிரஸ் நிபுணர் டாக்டர் ஜே. சி. குமரப்பா கூறுகிறார். கள்ளமார்க்கெட்டை அடக்கும் திறமை அரசாங்கத்துக்கு இல்லையென்றால், அதற்காக விலைவாசிகளையெல்லாம் நூற்றுக்குப் பத்தாக உயர்த்திவைத்து, ஏழை மக்களின் வாழ்க்கையை நாசமாக்குவதென்பது சிறந்த கொள்கை எனத் தோழர் குமரப்பாவுக்குப் படுகிறதுபோலும்! கள்ளமார்க்கெட் பெருகும் என்று பயந்து விலைவாசிகளைப் பெருக்குவதென்றால், அதேபோன்று, மக்களுடைய வருமான நிலையும் ஒன்றுக்குப் பத்தாக பெருக்கப்பட்டிருக்கவேண்டும். அப்படிச் செய்து விலைவாசிகளையும் பெருக்கிவிட்டால், மக்கள் திண்டாடமாட்டார்கள். ஆனால் விலைவாசிகளைப் பெருக்கிவைத்து வருமானம் கிடைக்க வழியில்லாமலிருந்தால் ஏழை மக்கள் கதி என்னாவது? இது காங்கிரஸ் பணக்காரர்கள் மனதில் படாமற்போவதற்குக் காரணமென்ன? அவர்களுக்கு விலைவாசிகள் உயர்ந்திருப்பதால் எவ்விதச் சங்கடமும் இல்லை. பஞ்சமும் இல்லை. ஒருவகையில் விலைவாசிகளின் உயர்வு அவர்களுக்கு மிகவும் நன்மைதரக்கூடியதே. ஏனெனில், காங்கிரஸ்காரர்களிற் பலர், பெரிய வியாபாரிகளாயிருப்பதால், இத்தகைய விலைவாசிகளின் உயர்வு அவர்களுடைய பணப்பெட்டியை நிரப்பும். இதை ஒழித்துவிட வேண்டுமென்றால் மனம்வருமா? எனவேதான், கள்ளமார்க்கெட்டைக்காட்டி விலைவாசிகளைக் குறைக்க முடியாதென்கிறார் தோழர் குமரப்பா. பூனை [illegible] தின்றுவிடுமே என்பதற்கஞ்சி, சமையலே செய்யாதிருந்தாள் ஒருத்தி என்பது எப்படியோ, அப்படிப்பட்டதுதான் தோழர் ஜே. சி. குமரப்பாவின் வாதம்!

"குவிஸ்லிங் பேச்சு நடத்த பிரிட்டனுக்கு நேரு வருகை"

"சீனா—கம்யூனிஸம் எதிர்ப்புக்களம் ஆக்கப்படுகிறது இந்தியா"

லண்டன் வந்திறங்கிய நேரு பற்றி 'டெய்லி ஒர்க்கர்'

அமெரிக்கா சென்று இந்திய பிரதமர் பண்டித நேரு லண்டன் வந்திறங்கிய செய்தியை வெளியிட்ட 'டெய்லி ஒர்க்கர்' என்ற பிரிட்டிஷ் பத்திரிகை "குவிஸ்லிங் பேச்சுவார்த்தைகளுக்கு நேரு பிரிட்டன் வருகை" என்று தலைப்பிட்டுக் குறிப்பிட்டிருந்தது.

'டெய்லி ஒர்க்கர்' கூறுவதாவது:— பண்டித நேரு ஏற்றுக்கொண்டு வந்திருக்கும் அமெரிக்கத் திட்டம், சீனாவையும் கம்யூனிஸத்தையும் தென்கிழக்கு ஆசிய விடுதலை இயக்கங்களையும் எதிர்த்து நிற்க இந்தியாவை நேருவின் தலைமையின் கீழ் உயர் தளிக்களமாக்குவதேயாகும்."

இந்தியாவின் ஸ்டர்லிங் மிச்ச இருப்பு பற்றி 'டெய்லி ஒர்க்கர்' பேசுகையில், அமெரிக்கா இம்மிச்ச இருப்பை எடுத்துக்கொள்ளலாம் அல்லது இந்தியாவுக்குக் கடன் தொகையளித்து இதனைச் சரி செய்ய ஏற்பாடு புரியலாமென்று குறிப்பிட்டுள்ளது.

இதிலென்ன :: :: ஆச்சரியம்?

நீதி நிர்வாக இலாக்காப் பிரிவினை இரு மாவட்டங்களில் அமுல் செய்யப்பட்டிருக்கிறது. அடுத்த ஜனவரியில் மேலும் நான்கு மாவட்டங்களில் அது அமுல் செய்யப்படுமென்று சட்டமந்திரி தோழர் மாதவமேனன் சட்டசபையில் தெரிவித்தார்.

இப்போதைய சட்டத்தில் எவ்வித மாறுதலின்றியும், மேற்கொண்டு செலவு எதுவுமின்றியும் மேற்படி திட்டம் நிறைவேறி வேலை செய்து வருகிறதென்று அவர் மேலும் கூறினார்.

இதுவரையில் நடந்தேறி வந்திருப்பதைக் கொண்டு பார்த்தால், திட்டம் மிகமிக நன்றாகவே வேலை செய்கிறதென்றே படுகிறதென மந்திரி மேலும் குறிப்பிட்டார்.

சியாங் சிந்தனை சிதையவில்லை?

சீனாவில் நடைபெற்றுவரும் போரின் விளைவை நிர்ணயிக்கக் கூடியதென்பதாகத்தான் கருதும் 100 மிட்செல் பாம்பர்களடங்கிய புதிய படையொன்றுக்கு சியாங்கேய்ஷேக் அமெரிக்காவில் 'ஆர்டர்' கொடுத்துள்ளாராம்.

கலிபோர்னியா கப்பல் கட்டும் கம்பெனியின் தலைவர் ஜெக் போர்டு சியாங் கட்சியினரோடு மேலும் மேலும் ஒப்பந்தங்கள் செய்துவருகிறாராம்.

மாலை மணி

சென்னை 11—11—49 வெள்ளிக்கிழமை

ஆதிக்கவெறி :: :: அழியட்டும்!

சாகப்போகிற மாடு கொம்பு அசைப்பது போல, அழிய இருக்கும் ஆதிக்க வெறிகள் இறுதியாகக் கொம்பசைத்துக் காட்டுகின்றன.

ஏகாதிபத்தியங்கள் கட்டி வைத்த ஆதிக்கக் கோட்டைகளெல்லாம் ஒன்றன்பின் ஒன்றாகச் சரிந்துவரும் நாளில், மடகாஸ்கர் தீவில் குடியேறியிருக்கும் பிரெஞ்சு ஆதிக்கவெறி கோட்டைச் சுவரின் மீது நின்று எக்காளமிட்டு, இந்தியரை முட்டித்தள்ள முனைந்திருக்கிறது. வல்லமை படைத்த பிரிட்டிஷ் சாம்ராஜ்யமே சரிந்து, ஆற்றலற்று அடங்கிவிட்டபோது, பிரெஞ்சு ஏகாதிபத்திய வீராப்பு எத்துணை நாட்களுக்கு நிலைத்து நிற்க முடியும்?

இந்து மாபெருங் கடலில், இந்தியாவிற்கும் ஆப்பிரிக்காவுக்கும் இடையில், ஆப்பிரிக்காவிலிருந்து 240 மைல் தொலைவிலுள்ள மடகாஸ்கர், பிரெஞ்சின் குடியேற்ற நாடாக இருந்து வருகிறது. அது 2,28,600 சதுர மைல் அளவிற்குப் பரந்துகிடக்கும் தீவு. அங்கு 42,27,000 மக்கள் வாழ்கிறார்கள். அவர்களில் 15,000 பேர்கள் இந்திய துணைக்கண்டத்தைச் சேர்ந்தவர்கள். அவர்களில் பெரும்பாலோர் தென்னாட்டை-திராவிடத்தைச் சேர்ந்தவர்கள். அந்த 15,000 மக்களையும், அத்தீவை விட்டே வெளியேற்றிவிட வேண்டும் என்னும் முயற்சியில் பிரெஞ்சு காலனி அதிகாரிகள் ஈடுபட்டிருப்பதாகத் தெரிய வருகிறது. வெளியேற்றுவதற்கு எது முக்கியமான காரணமாகும் என்பதற்கான விளக்கம் தெளிவாக அறிவிக்கப்படவில்லை.

இந்தியரை வெளியேற்றுவதற்குரிய காரணம் அறியப்படக் கூடவில்லை என்றாலும், மடகாஸ்கரில் பிரெஞ்சு ஆதிக்க வெறி தலைவிரித்தாட ஆரம்பித்திருக்கிறது என்பது மட்டும் தெளிவாகத் தெரிகிறது. அந்த ஆதிக்க வெறி இப்பொழுது அலங்கோலமாகக் காட்சி அளிக்க—அதுவும் இந்தியர் மேல் பாய என்ன காரணமாக இருக்க முடியும்? மடகாஸ்கரிலுள்ள இந்தியர்கள் மடகாஸ்கர் மக்களின் உரிமைப் போராட்டத்தில் பங்குகொள்ளுகிறார்கள் என்பதனால் ஏற்பட்ட சீற்றமோ அல்லது, மடகாஸ்கர் மக்களின் ஆதரவைத் தாங்கள் பெறுவதைக் காட்டிலும் இந்திய மக்கள் பெறும் வாய்ப்பில் இருக்கிறார்கள் என்பதனால் ஏற்பட்ட பொறாமையோ, அல்லது இந்தியாவிலுள்ள குடியேற்றப் பகுதிகள், இந்தோ சீனா போன்றவைகள் தங்கள் கையை விட்டுப்போகும்படியான நிலைமை உண்டாகி விட்டால், தங்களுக்கு ஆதிக்கம் இருக்கும் இடம், இந்து மாபெருங் கடலில் இருந்து தீரவேண்டும் என்பதினால் ஏற்பட்ட ஆதிக்க ஆசையோ, அல்லது இந்தியாவை விட்டுப் பிரெஞ்சு ஆதிக்கத்தைத் தொலைக்க, இந்தியாவிலுள்ள விடுதலை விரும்பிகள் முயலுகிறார்கள். ஆகவே அவர் உறவினரான இந்தியரைத் தொலைக்க வேண்டும் என்பதனால் ஏற்பட்டபழிக்குப்பழிவாங்கும் உணர்ச்சியே இந்தியர்களை இன்று விரட்ட ஆரம்பித்திருக்கிறது. மனிதப்பண்பின் அடிப்படையில் நின்று பார்த்தால், பிரெஞ்சுக்காரர்கள் எப்படி மடகாஸ்கரில் குடியேறினவர்களோ, அப்படித்தான் இந்தியர்களும் அங்கு குடியேறினவர்கள். நிலைமை இப்படியிருப்பதால், அங்கு நிலைத்த வாழ்க்கையை ஏற்றுக்கொண்ட மக்களின் பொதுவான ஆட்சி நிலவுவதுதான் ஜனநாயகத்திற்கும், மனித உரிமைக்கும் ஏற்றதாகுமே ஒழிய, பிரெஞ்சு ஆதிக்க ஆட்சி ஒருநாளும் நிலவக்கூடாது. ஆனால், அதற்குமாறாக பிரெஞ்சு ஆதிக்கம் நிலை பெற்றிருக்கிறது என்பது மட்டுமல்லாமல், இந்தியரை விரட்டவும் முற்பட்டிருக்கிறது. குதிரை கீழே தள்ளியது மட்டுமல்லாமல், குழியும் பறிப்பதுபோல! இந்த ஆதிக்க வெறியாட்டத்தை அடக்க இந்திய சர்க்காரும், மற்றும் உலகில் ஜனநாயகத்தில் நம்பிக்கை வைத்திருக்கும் அரசுகளும் தக்க நடவடிக்கைகளை எடுத்துக் கொள்ள வேண்டும்.

வெறும் பழிக்குப்பழி வாங்குவது என்ற முறையிலே ஆதிக்கம் நிலைநிறுத்தப்படுமானால், அதனால் பிரச்சினை தீர்ந்துவிடாது என்பது மட்டுமல்ல, உலகிற்குப் பெருங்கேடு விளைவிப்பதாகவும் முடியும். 'பழிக்குப் பழி வாங்குவது' என்பதுதான் கொள்கை என ஒருவர் ஏற்றுக்கொண்டுவிட்டால் பெரும்பாலான சமயங்களில் உண்மை நிலை தோன்றாமல் போய்விடும்; பிரச்சினை விபரீதத்திற்கு வந்து சேரும்; ஆத்திரந்தான் முன்னுக்கு வந்து நிற்கும். உண்மை நிலையை அறிந்தோ அறியாமலோ காஷ்மீர் உதவிப் பிரதமர் "கொல்லப்படும் ஒவ்வொரு காஷ்மீரிக்கும் பழி வாங்குவோம். அட்டூழியம் புரியும் பாக்கிஸ்தானைக் கடுமையாகத் தண்டிப்போம்" என்று கர்ஜித்திருக்கிறார். பாக்கிஸ்தானைத் தண்டிப்பதிலும், பழி வாங்குவதிலும் அவருக்குள்ள பற்று இருப்பதைவிட உண்மை நிலையைப் புள்ளி விவரத்தோடு காட்டி, பிரச்சினையைத் தீர்க்க முற்பட்டால் ஏற்புடைத்ததாக இருக்கும்.

அதுபோல, பழிக்குப்பழி வாங்குவது என்ற எண்ணத்தை முன்னிறுத்தி, மடகாஸ்கரிலிருந்து இந்தியரை விரட்ட பிரெஞ்சு ஆதிக்கவெறி முயலுவதாக இருப்பின், அந்த வெறியை முறியடிக்க வேண்டியது, விடுதலை வேட்கைகொண்ட உலக சக்திகளின் நீங்காக் கடமையாகும்.

நேர்மைச் செயல் ஒன்று தனக்கு ஆதரவாக இல்லை என்ற காரணத்துக்காக, அதனைப் பழி என்று குற்றஞ்சாட்டி, அந்தப்பழிக்குப் பழியாக வேறொன்று செய்கிறேன் என்று பழிவாங்க முற்படுவது அறிவுடைமையுமாகாது; அமைதியை நிலைநாட்டுவதுமாகாது; ஆதிக்க வெறியை நிலைநாட்டுவதாகவே முடியும். அத்தகைய ஆதிக்கவெறி ஒரு நாளில்லாவிட்டாலும் ஒருநாள், ஒரு காலம் இல்லாவிட்டாலும் மற்றொரு காலம், உறுதியாக அழிந்து பட்டே தீரும்! எனவே தான் மடகாஸ்கரில் தாண்டவமாடும் பிரெஞ்சு ஆதிக்கவெறி அழியட்டும் என்று கூறுகிறோம்.

தானிய இன்சூரன்ஸ் திட்டம்

உழவன் நலத்துக்கிருக்கவேண்டும்

பருவமழை பொய்ப்பதாலும், பூச்சி, புழு, வெட்டுக்கிளி—இனைய பிறவற்றாலும் விவசாய நாட்டின் விளைப்பொருள்கள் பெரிதும் பாதிக்கப் பெறுதல் எல்லோரும் அறிந்ததாகும். இப்பாதிப்பு விளைநிலத்தோடு, விளைப் பொருள்களை எதிர்நோக்கி காலங்கழித்து வருவோரோடும் நின்று விடவில்லை. அப் பாதிப்பு பெருத்த அளவில், நிலத்தைப்பண்படுத்தி பயிரிட்டுப் பலனை எதிர்நோக்கி நிற்கும் விவசாயியைத்தான் தாக்கும். விவசாயி இக்காரணம் எதிர்பாரா நிலையில் தாக்குண்டு அவலமுறும் தன்மைக்கு ஓரளவு கஷ்ட ஈடு மார்க்க 'கிராப் இன்சூரன்ஸ்' (தானிய இன்சூரன்ஸ்) என்ற பொது முறை மேனாடுகளில் சிற்சில பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 'ஆயுள் இன்சூரன்ஸ்' என்ற பெயரில் நாம் 'இன்ஷ்யூர்' செய்துகொள்வது போல, விளை நிலங்களையும் 'இன்ஷ்யூர்' செய்வதே இம்முறையின் அடிப்படையாகும். இவ்வண்ணம் இன்ஷ்யூர் செய்யப்பட்ட விளை நிலங்கள் எதிர்பாராவிதமாய் பூச்சு, புழு—பருவமழையின்மை ஆகியவற்றால் பாதிப்புறுமேல், அக்காரணமாக ஏற்படும் நஷ்டத்துக்கு விவசாயிக்கு கஷ்ட ஈட்டுத் தொகை வழங்கப்படும்.

சென்னை சர்க்காரின் பொருளாதார ஆய்வுரையாளர் வகுத்துத் தந்திருக்கும் இது போன்ற 'தானிய இன்சூரன்ஸ் திட்டம்' ஒன்றை சர்க்கார் ஆய்ந்து வருவதாக விவசாய மந்திரி தோழர் ஈ. பி. ஷட்டி சட்டசபையில் தெரிவித்துள்ளனர். இத் திட்டத்தைச் சர்க்கார் நடைமுறைக்குக் கொண்டு வருவார்களா? மாட்டார்களா என்பதை இப்போது கூற சாத்தியமில்லையென்றும், இதுபற்றி கருத்து சேகரிக்கப்பட்டு வருகிறதென்றும் அவர் தெரிவித்துள்ளார்.

சர்க்கார் இத்திட்டத்தை நடைமுறைக்குக் கொண்டு வரும்பட்சத்தில், அதனால் விவசாயிக்கு உள்ளபடியே நல்லதோர் நன்மையிருக்கும் தன்மையில் சட்டதிட்டங்கள் இருக்கவேண்டும். இத்திட்ட நிறைவேற்ற நிர்வாக சப்பந்திகளாக அமைவோர் நாட்டு நடப்பு அறிந்தோராயும், மக்கள் நலத்தில் நாட்டமுடையோராயும், விவசாய அறிவு நிரம்பப் பெற்றோராயும் இருக்க வேண்டியது அவசியம். பனாட்டு முறைகளைப் பின்பற்ற வேண்டுமென்ற விழைவு மட்டுமிருந்தால் போதாது நம் ஆட்சியாளர்க்கு; அம்முறைகள் வெற்றிகரமாய் நிறைவேறுதல் வேண்டுமென்ற அக்கறையும், கண்காணிப்பும் இருக்கவேண்டியது இன்றியமையாததாகும்.

தூத்துக்குடியில் ★ நாடகங்கள் ★

26—11—49, 27—11—49 ஆகிய இரு நாட்களிலும், திராவிட முன்னேற்றக் கழக நிதிக்காகத் தோழர் அண்ணாதுரையாலும் அவர் குழுவினராலும் "சந்திரமோஹன்" "நீதிதேவன் மயக்கம்" ஆகிய இருநாடகங்களும் நடத்திக் காட்டப்படும். அன்பர்களின் முழு ஆதரவு கோரப்படுகிறது. விவரம் பின்னால்.

தி. மு. கழகம்-தலைமை நிலையம்,
சென்னை.

மத்திய அரசாங்கத்திடமிருந்து உரிமை பெறும் ஆற்றல்

சென்னை அரசாங்கத்துக்கு இல்லையே

அவற்றைப் பெறவே ஆந்திரம் தனியாகவேண்டும்

சென்னையை ஆந்திரத்துடன் இணைப்பது பற்றி டாக்டர் பட்டாபி சீதாராமையா தம் கருத்தைத் தெளிவுபடுத்தியுள்ளார்.

"ஆந்திர மாகாணத்தைப் பிரித்துக் கொண்டு, பிறகு சென்னையையும் அதனுடன் சேர்த்துக்கொள்ள முயற்சிப்பதென்பதோ, வேலை செய்வதென்பதோ என்னுடைய நோக்கமன்று. சென்னையை ஆந்திர மாகாணத்தின் ஒரு பகுதியாகக் கேட்கவேண்டுமென்ற எண்ணம் எனக்கு எப்போதுமே ஏற்பட்டது கிடையாது. ஆனால் ஆந்திர மாகாணத்தைத் தனியே பிரிக்க வேண்டுமென்பதும், அதன் மூலம் மத்திய அரசாங்கத்திலிருந்து மாகாண மக்களுக்கு நியாயமாகக் கிடைக்கவேண்டிய உரிமைகளையெல்லாம் பெறுதல் வேண்டுமென்பதும் அதனால் மக்களை உயர்நிலையடையச் செய்து சுதந்தரமாகவும் சுபமரியாதையுடனும் வாழச்செய்ய வேண்டுமென்பதுமே என் எண்ணம்"

என்று பட்டாபி நன்கு விளக்கிவிட்டார். பட்டாபியின் கருத்திலிருந்து, சென்னை அரசாங்கம் மத்திய அரசாங்கத்திடமிருந்து தங்கள் உரிமைகளைப் பெற்றுத் தரமுடியாததாயிருக்கிறதென்பது தெளிவுபெற விளங்குகிறதல்லவா? எனவேதான் இவ்வாறு அஞ்சிப் பணிந்து மத்திய அரசாங்கத்துக்குத் தாசானுதாசனாய் இருக்க விரும்பாத ஆந்திரத் தலைவர்கள் தங்கள் நாட்டைத் தனியே பிரிக்கவேண்டுமென்று கோருகின்றனர்.

பாக்கிஸ்தான் தேசீய பாங்கி

பாகிஸ்தான் தேசிய பாங்கி என்ற பெயரில், சர்க்கார் ஆதிக்கப் பாங்கி யொன்றினை உடனடியாக நிறுவனம் செய்வதாக பாக்கிஸ்தான் சர்க்கார் உத்தரவு ஒன்று பிறப்பித்துள்ளது.

சணல், பருத்தி வியாபாரங்களுக்குக் கடன் வசதியளிப்பதே இப்பாங்கியின் இப்போதைய குறிக்கோள் என்று தெரிகிறது. காலப்போக்கில் இதர பாங்கி முறை வேலைகளையும் இது மேற்கொள்ளுமென்று கூறப்படுகிறது. இப்பாங்கியின் தலைமை நிலையம் காராச்சியிலிருக்குமென்றும், மற்றும் கிளைகள் காராச்சி, லாகூர், டாக்கா ஆகிய இடங்களில் இருக்குமென்றும் தெரிகிறது.

அவர்களையும் விடாதே!

காஞ்சீபுரம் கைத்தறி நெசவாளர் யூனியன், எலூரு சணல் மில் தொழிலாளர் யூனியன், சேலம் சூரமங்கலம் மாங்கனைஸ்ட் சிண்டிகேட் லேபர் யூனியன், சேலம் மில் லேபர் யூனியன் ஆகியவற்றையும் சென்னை சர்க்கார் சட்ட விரோத ஸ்தாபனமாக்கிவிட்டனர்.

குமாரமங்கலம்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

உள்ள முரண்பாட்டை நாம் எடுத்துக்காட்ட முனைய மாட்டோம். முன்னாள் சட்ட மந்திரியின் ஆராய்ச்சித்திறனை, நாம் மறுத்துக் கூற முன் வந்தால், அவர் நம்மீது, தம் தூக்கத்தின் போதாவது அடக்கு முறைகளை டாக்டர் ஏவி விடுவாரே, அதிலிருந்து நாம் எப்படித் தப்பிப்பிழைப்பது!

உப்புக்காய்ச்சாமல், ஒத்துழையாமை செய்யாமல், வரி கொடுக்க மறுக்காமல், சிறைக்குச் செல்லாமல் எடுத்து இயம்பிய ஏழாண்டுகளுக்குள்ளாகவே, காங்கிரஸ் கூறிய 'நேர்மையான ஏக இந்தியாவில், தங்களுக்கு என ஒரு இடம் ஏற்படுத்திக் கொண்டார்களே, அதற்கென்ன கூறுகிறீர் டாக்டரே! தங்கள் வாதத்தின் தன்மைப்படி பாகிஸ்தான் பிரச்னையிலும் நேர்மை இருக்கிறதா இல்லையா என்பதை, நாளை எங்காவது நாவசைக்கும் போது, விசித்திர வரலாற்று ஆசிரியா விளக்க முறைத்து விட்டால், நமது சந்தேகம் அப்பொழுதே அழிந்து போகும்.

திராவிட நாடு கோரிக்கை பதவிமோகத்தின் மறுபதிப்பல்ல. டாக்டரே கூட, திராவிட நாட்டில் பிரதமராக ஆட்சி நடத்தலாம். ஆனால் ஓரே ஒரு நிபந்தனையின் மீதுதான் பதவி அவரை ஏற்றுக்கொள்ளும். அதாவது சுரண்டும் சிறு கூட்டமும் சுரண்டப்படும் பெருங் கூட்டமும் இல்லாமல் ஒரு விதி செய்து, அதனை என்றென்றும் கட்டிக்காக்கும் மன வளமும் உறுதியும் பெற்றுக வேண்டும் என்பதுதான் அந்த நிபந்தனை. இதற்கு டாக்டரின் அரசியல் ஒழுக்கம் இணங்கிக் கொடுக்காது! என் செய்வது!

நமது திராவிடநாடு கோரிக்கையை சென்னை சர்க்காரும் அனுமதிக்காது. இந்திய சர்க்காரும் அனுமதிக்காது என்று அதிகாரத்தின் தன்மையை எடுத்துக்காட்டுகிறார். கேட்டதும் கிடைத்துவிடும் என்ற எண்ணத்தில் நாம் திராவிட நாடு பிரச்னையைக் கருதிக் கொண்டு இருக்கவில்லை. பல லாயிரக் கணக்கான திராவிட இளங்காளையர்களின் உடல் தியாகத்தால் தழும்பேறிய பின்னரே, நமது இலட்சியம் நிறைவேறும் என்பதை நாம் நன்கு அறிந்திருக்கிறோம். இதை நமது டாக்டர் அறிந்து கொள்ளட்டும்.

சென்னை நகரில் வள்ளுவர் பிறந்துவிட்ட காரணத்தால் சென்னையை ஆந்திரருக்கு விட்டுவிட மாட்டாராம் டாக்டர்! பாகிஸ்தான் பகுதியிலுள்ள சீக்கியர் குருத்துவாரத்தைத் திரும்பப் பெற வேண்டுமென்று, கிழக்கு பஞ்சாபில் சீக்கியர்கள் கிளர்ச்சி செய்வதுபோல், 'சென்னை நகரில் வள்ளுவர் பிறந்திருக்கிறார் எனவே சென்னை எங்களுக்குத்தான்! என்று காரணங்காட்டியொன்றும் ஆந்திரர்கள் சென்னை நகரை கேட்கவில்லை. பிரச்னைக்குச் சம்பந்தமில்லாத வள்ளுவரை இழுத்துப் போட்டு, வள்ளுவரின் பெய-

ருக்குக் களங்கம் ஏற்படச் செய்வது, பாரிஸ்டர் பரீட்சை கொடுத்தவருக்கு கொஞ்சம் கூட அழகாகாது!

ஆந்திரர்கள் சென்னையைக் கேட்டுக்கொண்டேயிருந்தால் சென்னை நகரை விட்டே ஆந்திரர்கள், அகதிகளைப் போல் ஓடவேண்டிய நிலை ஏற்பட்டு விடுமென்று டாக்டர் பேசுகிறார்! அடடா! டாக்டருக்கு என்ன இரக்கச் சிந்தனை!

'அகதிகள்' அக்கிரமக்காரர்களின் சிருஷ்டி. டாக்டர், தமிழர்களை, அந்த விரும்பத்தகாதப் பட்டியலிலே சேர்க்கப் பார்க்கிறார்! அந்த அக்கிரமக்காரர்கள் அகதிகள் என்றும் ஒரு கூட்டத்தை சிருஷ்டித்ததற்குக் கையாண்ட முறைகளை நாடு அறியும். எந்த அரசாங்கமும், பலாத்கார முறைகளை அனுமதிக்காது. பலாத்காரத்தைத் தூண்டுபவர்களைத் தண்டிக்கவும் சட்டங்கள் சட்ட புத்தகங்களில் இருக்கின்றன. அதனைச் சுமந்துகொண்டிருக்கும் சென்னை சர்க்காரும் இருக்கத்தான் இருக்கிறது. இவ்வளவு இருந்தும், மறைமுகமாக, பலாத்காரத்தைத் தூண்டுகிறார், முன்னாள் சட்டமந்திரி பாரிஸ்டர்—டாக்டர் சுப்பராயன!

என்ன இருந்தாலும் குமாரமங்கலம் மிட்டாதார் அல்லவா டாக்டர் சுப்பராயன! 'மிட்டா—பண்ணையாள்' உறவில் பழகிப் பெற்றுள்ள பயிற்சியை, பொதுவாழ்விலும் புகுத்தப் பார்க்கிறார் டாக்டர்!

இந்தோ-சீனாவில் எழுச்சி!

இந்தோ-சீனா இந்தோனேஷியாவாகுமா?

இந்தோனேஷியாவில் டச்சு ஏகாதிபத்தியத்துக்கு ஏற்பட்ட கதியே இந்தோ-சீனாவில் பிரஞ்சு ஏகாதிபத்தியத்துக்கும் ஏற்பட்டுவிடும்போலிருக்கிறது. கடந்த சில நாட்களாக வியட்னும் படைகளும், பிரஞ்சுப் படைகளும் ஒன்றையொன்று எதிர்த்துப் பலமாகப் போராடி வருகின்றன. வியட்னும் படைகளை அன்னும் என்னும் மலைப் பிரதேசத்துக்கு விரட்ட வேண்டும் என்பது பிரஞ்சுப் படைகளின் நோக்கம். ஏனெனில் வியட்னும் படைகளை மலைப் பிரதேசத்திற்கு விரட்டி விட்டால் அவர்களைச் சுலபத்தில் முறியடித்து விடலாம் என்பது பிரஞ்சுப் படைகளின் எண்ணம். ஆனால் இந்த எண்ணம் ஈடேற வியட்னும் வீரர்கள் இடங்கொடுக்கவில்லை. விடாது போர் புரிகின்றனர். வியட்னும்படைகளைப் பிரெஞ்சுப் படைகளை எதிர்த்து நிற்க முடியாமல் படைகள் பின் வாங்க ஆரம்பித்துவிட்டன. இதற்குக் காரணம் சீன கம்யூனிஸ்டுகளின் உதவி வியட்னும் படைகளுக்குக் கிடைத்து வருவதேயாகும் என்று பிரஞ்சு ராணுவத் தலைவர்கள் சொல்லுகின்றனராம்.

இந்த நிகழ்ச்சிகளிலிருந்து புலனாகும் உண்மை யாதெனில் வியட்னும் விறுகொண்டெழுந்துவிட்டது. இந்த விறுகொண்ட படையினர்க்கு விடுதலைபெற்ற சீன கம்யூனிஸ்டுகளின் உதவியும் கிடைக்க ஆரம்பித்திருக்கிறது. எனவே, விரைவில் இந்தோ-சீன விடுதலைப் போர் சற்று தீவிரமாகி அதன் விளைவாக பிரெஞ்சு சர்க்கார் இந்தோ-சீனாவைவிட்டு வெளியேறும் நிலைமை ஏற்பட்டால் அதில் ஆச்சர்யமில்லை. விரைவில் இந்தோ-சீனா இந்தோனேஷியாவாகலாம்.

புதிய சீனாவின் புதுமைமலிபீப்பிங்

கம்யூனிஸ்ட் சீனாவின் தலைநகராகிய பீபிங் இன்று புதுமை மலிந்து காணப்படுகிறது. ஒவ்வொன்றும் மாற்றமும் திருத்தமும் உற்றுக் காட்சியளிக்கிறது; மக்களிடையே புத்துணர்ச்சித் தாண்டவமாடுகிறது; பெரும் பெருந் திட்டங்கள் உருவாகி வருகின்றன. ரஷ்யாவிலிருந்து ஆய்வுரையாளரும் தொழில் நுணுக்க முணர்ந்த வல்லுநரும், கல்வியாளருமாக ஏறத்தாழ 300 பேர் வந்திருக்கின்றனர்; அவர்கள் போற்றி வரவேற்கப்பட்டு கொண்டாடப்பெற்று வருகிறார்கள். சோவியத் அரசுப் பிரதிநிதி ஜெனரல் ரோஷின் அங்குதான் தனது பெரும் சிப்பந்திக் குழுவுடனிருந்து வருகிறார்.

புதிய சீனா, சீன மக்கள் குடியரசு என்ற பெயரில் அழைக்கப்படுகிறது; சர்க்கார யந்திரம் மத்திய அரசியல் குழு என்று வழங்கப்படுகிறது. இதன் தலைவர் மா சே துங்; அரசியல் குழுவில் ஆறு துணைத் தலைவர்களும், 53 உறுப்பினர்களும் உளர். இதன் கீழ்தான் மத்திய மக்கள் சர்க்கார்.

சௌ-என்-லாயைப் பிரதமராகவும் அயல்நாட்டு மந்திரியாகவும்,

ஜெனரல் சூடேயை சேனாதிபதியாகவும் பேர் மந்திரியாகவும்,

ஷோன் சுன்-ஜுவை நீதி இலாகா மந்திரியாகவும்,

யௌ யீ-லினை தொழில் வர்த்தக மந்திரியாகவும் கொண்டு பணியாற்றி வருகிறது.

கம்யூனிஸ்ட் கட்சியின் புதிய செகரடெரி-ஜெனரல் லியூ ஷௌ-சி ஆவார். லிலி-சான் தொழிற் சங்கத்தின் துணைத் தலைவர்.

பிரிட்டிஷ் முதலாளிகளும் கதிகலங்கி நிற்கின்றனர். எத்துணையும் அவர்கள் துன்புறுத்தப்படவில்லையெனினும் ஏனைய மக்கள் கூட்டத்திலிருந்து அவர்கள் பிரிந்தே காணப்படுகின்றனர். அயல் நாட்டவர் சீனாவோடு தங்கு தடையின்றி தாராளமாய வியாபாரம் நடத்தி வந்த காலம் மலையேறிவிட்டதென்பதை பிரிட்டிஷாரும் அமெரிக்கரும் உணர்ந்து தொடங்கி விட்டனர். சீனாவில் மலர்ந்துள்ள புதிய ஆட்சி வர்த்தகத்தைத் தொழில் ஒவ்வொன்றையும் தேசியமயமாக்குவதற்கான வரையறுத்த திட்டங்களை வைத்திருப்பதோடு, சீனாவில் வந்து வியாபாரஞ் செய்யும் சக்திகளைக் கட்டுப்படுத்தவும் திட்டம் போட்டிருக்கிறதென்பதை பிரிட்டிஷ், அமெரிக்க முதலாளிகளுள் பெரும்பாலோர் தெரிந்துகொண்டனர்.

—'பிளிட்ஸ்'—

சந்தா

[வெளி நாடு]

மலேயா, பர்மா முதலிய இடங்களுக்கு:—

ஒரு மாத சந்தா	ரூ. 3—0—0
மூன்று மாத சந்தா	ரூ. 9—0—0
ஆறு மாத சந்தா	ரூ. 18—0—0
ஒரு வருட சந்தா	ரூ. 36—0—0

மூன்று மாதத்திற்குக் குறைந்த சந்தா ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

வி.பி: மூலம் அனுப்ப இயலாது.

திராவிட முன்னேற்றக் கழகக் கூட்டங்கள்

12—11—49

குடியேற்றம் :—	சி என், அண்ணாத்துரை, கே. ஏ. மதியழகன்.
சோமரசம்பேட்டை :—	டி. சே. சீனிவாசன், இரா. துரைராசன், என். நெடுமாறன், வி. எஸ். மணி.

13—11—49

திருப்பத்தூர் (வ. ஆ.) :—	(காலை 9 மணி) சி. என். அண்ணாதுரை
வேலூர் (வ. ஆ.) :—	(மாலை 6 மணி) சி. என். அண்ணாத்துரை, சி. பி. சிற்றரசு.
காங்கயம் :	இரா. நெடுஞ்செழியன்.
கடம்பத்தூர் .—	என். வீ. நடராசன், கே. ஏ. மதியழகன்.
திருத்தங்கல் :—	எம். எஸ். ராமசாமி, எம். எஸ். சிவசாமி, இரா. சு. தங்கப்பழம், டி. ஆவுடையப்பன்.
விருதுநகர் :—	என். எஸ். இளங்கோ, ஏ. வி. பி. ஆசைத்தம்பி.

14—11—49

பவானி :—	இரா. நெடுஞ்செழியன்.

இனி நடப்பவை

திருச்செங்கோடு—13—11—49 மாலை 5 மணிக்கு வைத்தியசாலை மேல மாடியில் சொற்பொழிவுக் கூட்டம் நடைபெறும். அதுபோது "மக்கள் ஒழுக்கம்" என்ற தலைப்பில் பேச ஆர்வமுள்ளவர்கள் பேசலாம். என தி. மு. க. திருச்செங்கோடு நகரக் கிளையார் கேட்டுக்கொள்கிறார்கள்.

* * *

திண்டுக்கல்—இவ்வூர் தி.மு.க. கிளையின் செயற்குழுக் கூட்டம், 13—11—49 ஞாயிறு காலை 10 மணிக்கு பகுத்தறிவுப் படிப்பகத்தில் நடைபெறும். செயற்குழுவினர் அனைவரும் இதையே அழைப்பாக ஏற்று வருகை தருமாறு வேண்டப்படுகிறார்கள்.

* * *

விருதுநகர்—இவ்வூர் தி. மு. க. கிளையின் சார்பாக 13-11-49 மாலை 7 மணிக்கு, இவ்வூர் அஞ்சல் நிலைய மைதானத்தில் ஓர் பொதுக்கூட்டம் நடைபெறும். அதுபோது தோழர்கள் அதிராம்பட்டினம் என். எஸ். இளங்கோ, ஏ. வி. பி. ஆசைத்தம்பி ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

● ● ●

சென்னை—சென்னை, சேத்துப்பட்டு தி. மு. க. கிளையின் செயற்குழுக் கூட்டம் 13-11-49 ஞாயிறு காலை 9 மணிக்கு சேத்துப்பட்டு, மங்களாபுரம், 3-வது வீதி, 103/4 எண்ணுள்ள இல்லத்தில் நடைபெறும். அதுபோது, செயற்குழுவினரும், மற்ற உறுப்பினரும் தவறாது வருகை தருமாறு வேண்டப்படுகிறார்கள்.

* * *

சென்னை—சென்னை, மயிலாப்பூர் தி. மு. க. கிளையின் செயற்குழு (அவசர)க் கூட்டம், அக்ரகாரபுரம் வீதி 10-வது எண்ணுள்ள இல்லத்தில் 12-11-49 இரவு 8-மணிக்கு நடைபெறும். உறுப்பினர் அனைவரும் தவறாது வரும் அழைக்கப்படுகிறார்கள்.

* * *

சென்னை—சென்னை, ஓட்டேரி தி. மு. க. கிளையின் சார்பில் 13-11-49 ஞாயிறு காலை 10-மணிக்கு ஓட்டேரி மார்க்கெட் ரோடு, 21-எண்ணுள்ள கழக மனையில் புலவர் தெ. த. அரசகுணார் அவர்களால் திருக்குறள் வகுப்பு நடத்தப்பெறும்.

* * *

திருவானைக்காவல்— சிரகம், திருவானைக்காவல் தி. மு. க. கிளையின் செயற்குழுக் கூட்டம், திருவானைக்காவல், பாரதி தெரு, தோழர் வடிவேல் அவர்கள் இல்லத்தில் 13-11-49 மாலை 6-மணிக்கு நடைபெறும். செயற்குழுவினர் அனைவரும் அழைக்கப்படுகிறார்கள்.

● ● ●

சென்னை—சென்னை மாகாணத் தமிழ் பாதுகாப்பு மாநாடு, 13—11—49 ஞாயிறு 3 மணிக்கு சென்னை கோகலே மண்டபத்தில் நடைபெறும். தே. ஜா. வி. எஸ். சங்கரசுப்பமணியம் பி. ஏ., பி. எல். அவர்கள் தலைமை வகிப்பார். சென்னை முதலமைச்சர் தோழர் குமாரசாமி ராஜா மாநாட்டைத் திறந்து வைப்பார்.

தமிழ் நாட்டுத் தெலுங்கு பெருமக்களே!

இன்றைய மொழிவாரி மாகாணப் பிரிவினையில் நம்முடைய நிலைமை என்ன என்பதைக் குறித்து முடிவு செய்ய

"தமிழ் நாடு தெலுங்கர் மாநாடு"

நடைபெறும்

தெலுங்குப் பொதுமக்களே, அறிஞர்களே, தலைவர்களே மாநாடு வெற்றிபெற, ஆலோசனை கூறி கலந்துகொள்ளுமாறு கோருகிறோம்.

மாநாட்டு அலுவலகம் :—
29, நம்புலய்யர் தெரு,
சென்னை—1.

P. ஜயச்சந்திர நாயுடு B.A., B.L.,
தலைவர், வரவேற்புக் கமிட்டி
V. முனுசாமி M. C.,
செயலாளர்.

ஆதிக்கவெறிகொண்டு யதேச்சாதிகாரம் வளர்க்கின்றனர்

பொது மக்களை அடிமைகொள்ள சட்டம் வகுப்பதா 'ஜனநாயகம்'?

ஒழுங்குவிதிகளில் 'பாஸிஸ' வித்துக்கள்!

சர்க்கார் சிப்பந்திகள் ஒழுங்கு முறை விதிகள் (1949) என்ற பெயரில் சென்னை சர்க்கார் திருத்தியமைக்கப்பெற்ற விதிகள் பட்டியலொன்றை வெளியிட்டுள்ளனர். 1936-ம் ஆண்டில் வெளியிடப்பெற்ற 'சர்க்கார் சிப்பந்திகள் ஒழுங்குமுறை விதிகளை' ரத்து செய்து அவற்றுக்குப் பதிலாக இவை வெளியிடப்படுகின்றன.

சர்க்கார் சிப்பந்திகள் நடத்தை பற்றியும், அவர்கள் பொதுமக்களோடு நடந்துகொள்ளவேண்டிய முறைகள் பற்றியும் விவரமாக வரையறுக்கப்பட்டுள்ளது. நேர்மை மிகவுடைத்தாயிருக்க வேண்டிய சர்க்காரென்று தனது சிப்பந்திகளைக் கட்டுத்திட்டப்படுத்தினைத்துக்கொள்ள வேண்டியதுதான். அதை நாம் ஆட்சேபிக்கவில்லை.

ஆனால் சர்க்கார் வெளியிட்டிருக்கும் பல்வேறு விதிகளுள் ஒன்று நம் கவனத்தை 'காந்தம்'போல் கவருகிறது. விதியைப் படித்துப்பார்க்கும் அளவிலேயே விசித்திரம், வேடிக்கைத் தன்படுகிறது! விதியின் விளைவு எப்படி இருக்குமென எண்ணப்புகுந்தாலோ எண்ணற்ற கொடூர அலைகள், புயல்கள், சூறாவளிகள் வந்து மோதுகின்றன.

சர்க்காரின் அவ்விதி கூறுகிறது: "யாதொரு சர்க்கார் சிப்பந்தி எச்செயல் புரிந்தால், அவர் விதிகளுக்குப் புறம்பாக நடந்தாரெனக் கருதப்படுவாரோ அச்செயலை அவரது மனைவியோ, அவர் உடனுறைபவரும் அல்லது ஏதாவதொரு வகையில் அவரைச் சார்ந்து வாழும் குடும்ப உறுப்பினரோ புரிந்தால், அதற்கு அச் சிப்பந்தியே பொறுப்பாளியாவார்."

எப்படி இருக்கிறது, சர்க்கார் தனது சிப்பந்திகளுக்கு வகுத்துவைத்திருக்கும் ஒழுங்குமுறை விதி? சர்க்கார் வரையறுத்திருக்கும் இவ் விதியின் விளைவு எவ்வளவு படுமோசமாக இருக்குமென்பதை உணர்ந்து செய்திருந்தார்களானால், அவர்களின் ஆதிக்க வுணர்ச்சிக்கு நம் பாராட்டு! விளைவுணராது செய்தார்கள் சாதாரணமாக, என்றால் அவர்களது போக்குக்குப் பரிதாபப்படுகிறோம்!

தனது உற்றார், உறவினர், மனைவி, மக்கள் புரியும் செயல்களுக்கெல்லாம் ஏழை சிப்பந்தியொருவன் பொறுப்பாளியாவது, அதற்கான தண்டனை அனுபவிப்பதென்றால், அரசியல் விழிப்பு, கருத்து வளர்ச்சி மிக்க இக்காலத்தில் எத்தனை சிப்பந்திகள் இந்தச் சர்க்காருக்குத்தேற வரென்று கேட்கிறோம். ஒரு குடும்பத்தில் ஒருவர் சர்க்கார் சிப்பந்தியாயிருக்கலாம், மற்றவர் கம்யூனிஸ்டாய் இருக்கலாம், அவர் தம்பி திராவிட இயக்கத்தைச் சார்ந்தவராயிருக்கலாம், மனைவி மாதர் உரிமைப் போராட்டத்தில் ஈடுபட்டிருக்கலாம். இது இயற்கை; அதுவும் நாகரிக காலத்தில், மக்களாட்சிக் காலத்தில் வரவேற்கக் கூடியதுமாகும். ஒரு சர்க்காருக்கு இது பிடிக்கவில்லையானால் அந்தச் சர்க்கார் யதேச்சாதிகார சர்க்காராகத்தானிருக்கமுடியுமே தவிர, சர்வாதிகார சர்க்காராகத்தானிருக்க முடியுமே தவிர, இணைத்துணரிம் மக்களாட்சிப் பண்போ அறிவுக்கலப்போ உடையதாக இருக்க முடியாது. 'சுயராஜ்ய'சர்க்காரென்று கூறப்படுமொன்றில் ஏறத்தாழப்படித்த மக்களுள் பெரும்பாலோர் ஏதோ ஒரு விதத்தால் சர்க்கார் யந்திரத்தோடு தொடர்பு கொண்டோராகவே இருப்பர். அவர்களது நடத்தையை அவர்களது உறவினரின் நடத்தையைக் கொண்டு நிர்ணயிப்பது என்றால் சர்க்கார் தனது சிப்பந்திகளை கட்டு திட்டப்படுத்தி கருத்து வளர்ச்சிக்கு இடங்கொடாது வாழவைக்க விரும்பும் அளவுக்கு அச்சிப்பந்திகளின் உற்றார் உறவினர்களும் 'ஊமையாய் செவிடர்களாய் இருந்தவரவேண்டுமென விழைகிறார்கள் என்பதுதானே பொருள்! சர்க்கார் சிப்பந்தி கடமை புணர்ந்து நடந்துகொள்ளவேண்டியமைக்காக வரையறுக்கப்படும் விதிகளை அவனது பெண்டுபிள்ளைகளும் பின்பற்றி நடந்து வரவேண்டுமென்று வலியுறுத்துவதில் என்ன நியாயம், நீதி இருக்கிறது என்றுகேட்கிறோம். இதுபோன்று சட்டமியற்றும் நாட்டில், இச்சட்டம்நிலைபெறும் நாட்டில் 'ஜனநாயகம்' ஒரு ஆக்குலமாவது வளருமாவெனக் கேட்கிறோம்.

பொதுமக்களுக்கு அடிமையே சர்க்கார் என்பதுபோய், பொதுமக்களை சர்க்காருக்கு அடிமையாக்கும் இம்முயற்சியை எந்த நாகரிக வுணர்வுகொண்ட மனிதனும் வரவேற்க முடியுமா? தங்கள் கையில் அதிகாரமிருக்கிறதென்ற காரணத்தால், தங்கள் பதவிக்காலம் நீடிக்க வேண்டுமென்ற ஆதிக்கவெறியில் காங்கிரஸ் சர்க்கார் வகுத்திருக்கும் இவ்விதியின் விளைவு விபரீதமாகும் வேதனைதரும் என்று மேலும் எச்சரிக்கிறோம்.

பயனளிக்கும் இரயில்வே நிலையம்

ஜெனரல் மானேஜர் கைவிரிக்கிறார்!

தென்னிந்திய ரயில்வேப் பாதையில் எழும்பூரையடுத்த சேத்துப்பட்டு—கோடம்பாக்கம் இரயில்வே நிலையங்களுக்கு மத்தியில் புதிதாக ஒரு இரயில்வே நிலையம் கட்டியுதவ வேண்டுமென்று பொதுவாக இருந்துவந்த ஒரு கோரிக்கையை தெ. இ. இரயில்வே ஜெனரல் மானேஜர் தோழர் கே. ஆர். ராமானுஜம் உதறித்தள்ளிவிட்டாரெனத் தெரிகிறது. இந்திய சர்க்காரின் சிக்கன முறை இயக்கத்தை அனுசரித்தே இக்கோரிக்கையை ஏற்றுக்கொள்வதற்கில்லையென அவர் குறிப்பிட்டுள்ளார்.

சேத்துப்பட்டுக்கும் கோடம்பாக்கத்துக்கும் மத்தியில் ஒரு ரயில்வே நிலையம்—மின்சார இரயில் வண்டிகள் நிற்குமிடம் இருக்கவேண்டியது அவசியமென்பதற்கு ஒன்றுக்கு மேற்பட்ட காரணங்கள் உள்ளன. சேத்துப்பட்டு நிலையத்திலிறங்குவோர் குறிப்பிடத்தக்க தொலைவு நடந்து தீரவேண்டிய தன்மையில் பச்சையப்பன் கல்லூரி இருக்கிறது அதேபோல், கோடம்பாக்கத்திலிறங்குவோர் அதைவிட சற்று அதிகத் தொலைவு நடந்துவரவேண்டிய நிலையில் லயோலா கல்லூரி இருக்கிறது. நாள்தோறும் நூற்றுக்கணக்கான மாணவர்கள் இவ்விரு கல்லூரிகளுக்கும் வெளியிலிருந்து வருகிறார்கள். மேற்படி இரண்டு ரயில்வே நிலையங்களுக்கும் மத்தியில் புதிதாக ஒரு நிலையம் ஏற்படும் பட்சத்தில், வெயிலிலும் மழையிலும் காய்ந்து நனைந்து ஆண்டுதோறும் அவதியுறும் மாணவர்கள் பெரும் நன்மையுறுவர். அன்றியும், நகரில் இட நெருக்கடி காரணமாக கோடம்பாக்கத்தைச் சேர்ந்த ஆலைமேடு, சௌராஷ்டிர நகர், குயப்பேட்டை முதலிய பகுதிகளில் மக்கள் பெருவாரியாகக் குடியேறி வருவதோடு, புதிதாகக் குடியிருப்பு வீடுகளும் கட்டப்பட்டு வருகின்றன. புதிய இரயில்வே நிலையமொன்று ஏற்பட்டால் இப்பகுதிகளைச் சேர்ந்த மக்களுக்கெல்லாம் போக்குவரத்து வசதியேற்படும். மேலும் நுங்கம்பாக்கம் வட்டாரத்திலிருந்து வருபவரும், தொழிலாளர்களும் 'சீசன் டிக்கெட்' பெற்று இந்நிலையம் வந்து ரயிலேறி தங்கள் தொழிலிடங்களுக்குச் செல்ல வகையேற்படும்.

எனவே, இவ்வளவு பெருத்த அளவில் நன்மை பயக்கக்கூடிய ஒரு 'இரயில்வே நிலையம்' இதுவரை நிறுவப்பெறாமலிருந்ததே பெருங்குறையும் தவறுமாயிருக்க, இப்போதும் நிறுவப்போவதில்லை யென்று ஜெனரல் மானேஜர் கூறுகிறாரென்றால், அதற்குப் பொறுப்பும் பொது நலத்தில் நாட்டமும் இல்லையென்று கூறுவது தவிர, வேறென்ன செய்வது?

பெருவாரியான மக்களுக்கு வசதியளிக்கக்கூடிய இந்த நிலையத்தைக் கட்டுவதால் இந்திய சர்க்காரின் சிக்கன முறையில் 'ஓட்டை' எதுவும் விழுந்துவிடப்போவதில்லை. பொருளற்றச் செலவுகள் பலகோடி ரூபாயாகின்றன. மக்களுக்குப் பயன்தரக்கூடிய, குறிப்பிடத்தக்க அளவுக்கு வருமானம் நல்கக்கூடிய இந்த நிலையத்தால் இந்தியசர்க்காரின் 'பொருளாதாரம்' எந்தவகையிலும் இப்போதிருப்பதற்கு மேல் 'குடி முழுகிப் போய்விடப்' போவதில்லை.

இந்தோனேஷிய விடுதலை அமெரிக்காவுக்கு லாபமா?

இந்த நிலை நீக்கி இந்தோனேஷியாவைக் கைப்பற்ற கம்யூனிஸ்டுகள் முயற்சி!

இதுகாறும் அந்நிய ஆட்சியின் கீழிருந்து அவதிப்பட்ட இந்தோனேஷியக் குடியரசினர், தம்முடைய நெடு நாளைய போராட்டத்தின் பயனாக ஒருவாறு விடுதலைப் பெற்றுப் புது ஐக்கிய ஆட்சியை அமைத்துக்கொள்ளும் கட்டத்தை அடைந்திருக்கின்றனர். டிசம்பர் 30-ல் அதிகாரம் டச்சு அரசியலாரிடமிருந்து இந்தோனேஷியர்களுக்கு மாறப் போகிறது.

பொதுவாக எந்த நாட்டிலும் அரசியல் அதிகாரம் மாறும்போது, அல்லது மாறின பின் பொருளாதாரநெருக்கடி ஏற்படுவது இயல்பு. இந்த நெருக்கடியைச் சமாளிக்க சமதர்மவாதிகள் பொருளாதார சமத்துவத்துக்கு வழி தேடுவார்கள். இதே சமயத்தில் முதலாளித்வம் தன்னுடைய ஆதிக்கத்துக்கு இதனால் வழி தேடும். சமதர்மவாதிகளுக்கும் முதலாளித்வ பாதுகாவலர்களுமிடையே பெருத்த மோதுதல் ஏற்படுவதுண்டு. அப்படிப்பட்ட நிலைதான் இன்றைய தினம் இந்தோனேஷியாவுக்கு ஏற்பட்டிருக்கிறது.

அண்மையில் ஹேக்கில் நடைபெற்ற வட்டமேஜை மகாநாடு மேற்கத்திய ஏகாதிபத்தியவாதிகளுக்கும் இந்தோனேஷிய பிரதிநிதிகளுக்குமிடையே நடைபெற்ற ஒருவித ஒப்பந்தம் என்பது இப்பொழுதுதான் தெரிய வருகிறது. ஏனெனில் இந்தோனேஷியாவுக்கு விடுதலை அளிப்பதாக வாக்குறுதி தந்துவிட்ட வல்லரசுகள் அதே சமயத்தில் தொடர்ந்து இந்தோனேஷியாவைச் சுரண்டுவது எங்ஙனம் என்பதற்குத் திட்டமிட்டுவிட்டன. அதாவது அமெரிக்கா வழக்கம்போல் மற்ற நாடுகள் விஷயத்தில் கையாளும் தந்திரத்தை இந்தோனேஷியா விஷயத்திலும் கையாள ஆரம்பித்திருக்கிறது. மார்ஷல் திட்டம் இந்தோனேஷியாவிற்குள்ளும் வரப்போகிறதாம். போராடிப் போராடி அலுத்துப்போயிருக்கும் அந்நாட்டு மக்களை மார்ஷல் திட்டம் என்ற பெயரில் டாலரைக் காட்டித் தனது ஆதிக்கத்திற்கு அடி பணிய வைக்கப் பார்க்கிறது. இதைக் கண்டு உள்ளம் கொதித்தெழுகின்றனர் இந்தோனேஷியப் பொதுவுடமைவாதிகள். புது வாழ்வு பெறப்போகும் இந்தோனேஷியாவை அமெரிக்க டாலர் ஏகாதிபத்தியம் என்னும் மற்றொரு புது ஏகாதிபத்தியத்துக்கு அடிமையாவதைத் தடுக்கப்பார்க்கின்றனர். இதனை இன்னும் சுருக்கமாகச்சொல்ல வேண்டுமானால் இந்தோனேஷிய ஆட்சியைப் பொதுவுடமைக்காரர்கள் கைப்பற்ற முயற்சி செய்கின்றனர் என்றே சொல்ல வேண்டும். இன்னும் அந்நாட்டிற்கு உண்மையிலேயே புதுவாழ்வைத்தேடித்தர முன் வரும் பொதுவுடமைக்காரர்களுக்கும், டச்சு, அமெரிக்க, பிரிட்டிஷ் கூட்டுக்கொள்ளைக்கு நாட்டைக் காட்டிக் கொடுக்க விரும்பும் நயவஞ்சக இந்தோனேஷிய முதலாளிவர்க்கத்துக்கு மிடையேதான் இப்பொழுது போராட்டம் நடைபெற்று வருகிறது. இதைத்தான் மேற்கு ஐரோப்பிய வல்லரசுகளும் அவற்றின் அடிவருடிகளும் "இந்தோனேஷியாவைக் கவிழ்க்க கம்யூனிஸ்டுகள் சதி" என்று திரித்துக் கூறுகின்றன. அந்த பாட்டைத்தான் நம நாட்டு தேசிய ஏடுகளும் திருப்பி ஒப்பு விக்கின்றன.

உண்மையை ஆராய்ந்து பார்க்கின்றபோது தற்போது இந்தோனேஷியாவல்ல. அமெரிக்காதான். இதைத்தான் எதிர்க்கின்றனர் கம்யூனிஸ்டுகள். இன்று பட்டேவியாவில் நடைபெறும் கிளர்ச்சி இதைத்தான் காட்டுகிறது. அண்மையில் பட்டேவியாவில் கம்யூனிஸ்டுகளால் வெளியிடப்பட்ட துண்டுப் பிரசுரங்களில்,

"டச்சு, அமெரிக்க, பிரிட்டிஷ் முதலாளித்வ ஏகாதிபத்தியவாதிகளுக்குப் பொருளாதார சலுகைகள் அளிக்கும் ஹேக் ஒப்பந்தத்தைப் பரிபூரணமாக நிராகரிப்பதே கம்யூனிஸ்டு கொள்கை. இந்தோனேஷியாவில் ஒரு சோவியத் குடியரசை நிலை நாட்டுவதே அவர்களுடைய லட்சியம்"

பிரசுரிக்கப்பட்டிருக்கிறது. இதிலிருந்தே இன்றைய இந்தோனேஷிய நிலைமையை ஒருவாறு அறியலாம்.

எனவே, கம்யூனிஸ்டுகள் இந்தோனேஷிய குடியரசைக்கவிழ்க்க சதி செய்கின்றனர் என்பது பொருந்தாக் கூற்று. விடுதலைப் பெற்ற இந்தோனேஷியா அமெரிக்க டாலர் ஏகாதிபத்தியம் என்னும் படுகுழியில் வீழவிருந்து அதனைப் பாதுகாக்க கம்யூனிஸ்டுகள் முயற்சி செய்கின்றனர் என்பதே பொருந்தும் கூற்றாகும்.

உண்மையல்ல!

சென்னை மந்திரிகள் சிலர் மீது சுமத்தப் பெற்றிருந்த குற்றச்சாட்டுகள் கைவிடப்பட்டுவிட்டனவென்பது உண்மையல்ல. குற்றச்சாட்டுகளைக் காங்கிரஸ் காரியக் கமிட்டி ஆராய்ந்து வருகிறது.

—டாக்டர் பட்டாபி சீத்தாராமய்யா

நந்தியால், 8-11-49.

"தேசியவாதி" மீதும் அம்பு!

புதுடெல்லியில் அண்மையில் துவக்கப்பெற்ற ஆங்கில வார இதழாகிய 'நேஷனலிஸ்ட்' (தேசியவாதி) என்ற பத்திரிகை மீது டெல்லி பிரதம கமிஷனர் தடை விதித்துள்ளார். 1949-ம் ஆண்டு கிழக்குப் பஞ்சாப் பொது பாதுகாப்புச் சட்டத்தின் கீழே மேற்படி பத்திரிகையின் வெளியீட்டின் மீது தடைவிதிக்கப்பட்டுள்ளது பொது அமைதி, சமாதானம், பாதுகாப்பு இன்னபிறவற்றுக்குப் பங்கம் விளைக்கும் வகையில் மேற்படி பத்திரிகை ஆட்சேபகரமான கருத்துரைகளை வெளியிட்டுவருகிறதென்று தடையுத்தரவில் குறிப்பிடப்பட்டுள்ளது.

மேலும் அகதிகள் வருகை

பாக்கிஸ்தானிலிருந்து மேலும் மேலும் சென்னையில் அகதிகள் அலைக்கப்படுகின்றனர். சர்க்கார் வெளியிட்டிருக்கும் புள்ளி விவரங்கள் இதனைத் தெளிவுபடுத்துகிறது. 29—10—49-டுடன் முடிவடைந்த வாரத்தில் 1971 அகதிகளும், சென்ற வாரத்தில் 2525 பேர்களும் சென்னைக்கு வந்திருப்பதாகத் தெரிகிறது.

நாட்டில் நல்லாட்சி நிறுவுவதே இலட்சியம்

அறந்தாங்கியில் மாபெருங்கூட்டம்

இளங்கோ--ஆசைத்தம்பி--நடராசன் பேச்சு

அறந்தாங்கி, நவ. 26—

நேற்று மாலை 6-மணிக்குத் திராவிட முன்னேற்றக் கழகத் துவக்க விழா தோழர் சதாசிவம் முன்மொழிய, பட்டுக்கோட்டைத் தோழர் இளவரி வழிமொழிய அதிராமபட்டினம் தோழர் என். எஸ். இளங்கோ தலைமையில் மிகச் சிறப்புடன் ஆரம்பமாகியது.

என். எஸ். இளங்கோ

தோழர் இளங்கோ முகவுரையாக, முன்னேற்றக் கழகம் தோன்றியது பற்றியும், பெரியாருக்கும் முன்னேற்றக் கழகத்தினருக்கும் எந்தவிதமான போட்டி மனப்பான்மையும் இடையாதென்றும் இலட்சிய முன்னேற்றத்தில் வேண்டுமானால் போட்டி இருக்கலாம் என்றும், இன்றைய ஆட்சி மிகவும் பிற்போக்கானது என்றும், நமக்கு அடிமை ஆட்சி என்றும் ஆதாரத்தோடு விளக்கிவிட்டு, பண்டித நேருவின் அமெரிக்கப் பயணம் நமக்கு எந்தவித நன்மையையும் தராது என்றும் மிக விளக்கமாக ஒரு மணி நேரம் பேசினார்.

ஏ. வி. பி. ஆசைத்தம்பி

பின் விருதுநகர் தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி திராவிட முன்னேற்றக் கழகத்தின் சமுதாயக் கொள்கைகளையும், வடநாட்டுச் சுரண்டலைத் தவிர்க்க வேண்டிய அவசியத்தையும் விளக்கிவிட்டுப் பேசியதாவது; "பெரியார் அவர்கள் சமீபத்திலே இங்கு வந்து பேசி இருக்கிறார். அதே சமயம் தி. மு. கழகம் மாகாணம் எங்கும் துவக்கப்பட்டு வந்தது இன்று இந்த ஊரில் ஆரம்பம். முன்னேற்றக் கழக ஆரம்பம் என்றால் திராவிடர் கழக ஒழிப்பு அல்ல. அதுவும் வேலை செய்யட்டும். இருவரும் மாறி மாறி மக்களுக்கு அறிவுரை கூறி ஆரியத்தை அழிப்போம்; நம சீரிய கொள்கையைப் பரப்புவோம். முன்னேற்றக் கழகத்தைப் போட்டி முகாம் எனக் கருதி நாம் மூட்டிக்கொண்டால், நம்மை ஒருவரை ஒருவர் எதிரிக்குக் காட்டிக் கொடுத்தவர்களாவோம் எதிரி அதைத்தான் எதிர்பார்க்கிறான். நாம் எச்சரிக்கையாய் இருக்கவேண்டாமா? இது தெரிந்தும் பின் ஏன் பெரியார் திட்டுகிறார்? நம்மைத் திட்டினால் பெரியாருக்கு என்ன லாபம்? எதிரிகளுக்கு ஆதரவாகப் பெரியார் பேசியும், எழுதியும் நம்மை ஒழித்துவிட்டால் திராவிட நாடு கிடைத்துவிடுமா? நாம ஒழிந்துவிட்டால் பெரியார் தனித்து வாழ முடியுமா? எதிரிகள் வாழவிடுவார்களா? நாளை பெரியாருடைய புகழுக்கோ கொள்கைக்கோ ஆபத்து என்றால் நாங்கள் சும்மா இருப்போமா? நாளை பெரியார் அவர்களை இந்த அரசாங்கம் அக்கிரமமாகச் சிறையில் தள்ளிப் பூட்டினால் கதவை உடைக்க எங்களைத் தவிர வேறு யார் உளர்? இதைப் பெரியார் அவர்கள் உணர்ந்து இன்றையபோக்கை மாற்ற ஏன் மறுக்கிறார்? பெரியார் தலைமையின் கீழ் வேலைசெய்ய இயலவில்லை. ஆனால் நம் இலட்சியம் வெற்றிபெறும். அதனால் பெரியாருக்குப் பெருமை உண்டு"-என்பதாக ஒரு மணி நேரம் பேசினார்.

என். வி. நடராசன்

அடுத்து சென்னைத் தோழர் என். வி. நடராசன் பேசிய தன் சுருக்கம்:—

"தலைவர் அவர்களே! தோழர்களே! திராவிட முன்னேற்றக் கழகத் தோற்றம் பற்றிய காரணங்கள் நீங்கள் யாவரும் அறிந்ததேயாகும் எனக்கு முன் பேசிய நண்பர் ஆசைத்தம்பியும் கூட்டத் தலைவரும் அதை விளக்கினர்.

பிணக்கு, ஏன்?

பெரியாரிடத்தில் பிணக்குக் கொண்டோம் என்றால் எதற்காக? சொந்த லாபம் கிட்டவில்லையே என்றா? பதவி படம் கிட்டவில்லையே என்றா? அவரது தலைமைப் பீடத்தை அசைத்துவிட்டோம் என்ற புகழுரைக்காகவா? அல்லது அவருக்குப் போட்டியாக நாங்களும் ஒரு கழகம் நடத்த வேண்டும் என்றா? இல்லவே இல்லை! பெரியார் இதுவரை கூறிவந்த கொள்கை அவர் காலத்திலேயே நாசமாக்கப்படக்கூடாது; பிறர் நையாண்டி செய்யக்கூடாது. எந்தெந்த ஆணவங்கள் நாட்டுக்கு, நல்வாழ்வுக்கு, முட்டுக் கட்டையாய் இருந்து வந்ததோ அவை தகர்த்தெறியப்பட்டு மக்களின் நலனுக்கான நல்லதோர் ஆட்சிமுறை அமைக்கப்படவேண்டும் என்ற எண்ணத்தை அடிப்படையாகக் கொண்டே திராவிட முன்னேற்றக் கழகம் பணியாற்ற முற்பட்டிருக்கிறது.

நல்லாட்சிகாண!

மந்திரி பதவிகளோ அல்லது சட்டசபையில் இடம் தேடிக் கொள்வதன்பதோ எங்கள் நோக்கமல்ல. ஆனால் பதவியில்—ஆட்சிப பீடத்தில் அமருபவர்கள் யாராய் இருப்பினும் அவர்கள் நாட்டின் ஜீவநாடியான பாட்டாளிகளுக்கு, ஏழை, எளியவர்களுக்கு உரிமை வழங்கும் தன்மையுடன் கூடிய ஆட்சி முறையை அமைத்து நடத்தல் வேண்டும் உலுத்தர்களுக்கும், ஜாதி ஆணவத்தால் ஏமாற்றிப் பிழைப்பவர்களுக்கும் மட்டுமே ஆக்கமளிக்கும் பிற்போக்கான அரசியல் முறையை முன்னேற்றக் கழகம் எதிர்த்து அதை இந்நாட்டில் இருந்து விரட்டியே தீரும்.

சேரவாரீர்!

இவ்வித புரட்சிகரமான காரியத்தை நடைமுறையில் கொண்டுவர, நாட்டுமக்களின் ஒத்துழைப்பை மட்டுமல்ல மற்ற கட்சிகளில் உள்ள முற்போக்கு நோக்கங்கொண்ட தோழர்களின் ஒத்துழைப்பையும் முன்னேற்றக் கழகம் வரவேற்கத் தயாராய் இருக்கிறது இவ்விதம் ஒன்றுபட்டு நாம் செயலாற்றினால் வெகு விரைவில் உழைப்பதற்கேற்ற தான ஓர் நல்லாட்சியை நம் நாட்டில் நிறுவமுடியும். இப்படித் தூய்மையான எண்ணத்தை திராவிட முன்னேற்றக் கழகம் கொண்டிருப்பதால்தான் பெரியார் அவர்கள் இன்றையளவும் எங்களை வசைமாரிகளால் தாக்கிக் கொண்டிருந்தும் எங்கள் கழகப் பொதுச் செயலாளர் தோழர் அண்ணாத்துரையும் நாங்களும் அதைபபற்றி கவலை கொள்வதில்லை.

கனவு பலிக்கவில்லை

திராவிடர் கழகமும், திராவிட முன்னேற்றக் கழகமும் நாட்டிலே மோதிக்கொண்டு அழிந்துவிடும் என்று அரசியலார் முதல் பதவி வேட்டைக்காரர்கள்வரை கருதிவந்தனர். ஆனால், இன்று திராவிட முன்னேற்றக் கழகத்தின் திட்டத்தையும் பிரசாரத்தையும் கண்டு அவர்கள் ஏமாந்து விழிக்கின்றனர் ஏன்? வெட்கப்படுகின்றனர் என்றுதான் கூறவேண்டும். எங்களுக்குள் ஏற்பட்டுள்ள வேறுபாட்டால் எங்களின் லட்சியத்தை, கொள்கையை அழித்துவிடலாம் என யார் நினைத்தாலும் இறுதியில் பைத்தியக்காரர்களாகவே கருதப்படுவார்கள்

இரண்டாம் போர்முனை

திராவிட முன்னேற்றக் கழகம் நல்ல அமைப்பு ஒழுங்கு முறையுடன் பாசிசத்தை, வடநாட்டு ஏகாதிபத்தியத்தை, பழமைப் பீடையை ஒழிக்கும் இரண்டாம் போர்முனையாகும். பெரியார் இன்று எங்களை நிந்திக்கலாம்; நாளை அல்லது சிலகாலம் பொறுத்தாவது தமது செயலுக்கு வருந்தி எங்களை வரவேற்கலாம். அவரும் மனிதர்தானே. எனவே, வடநாட்டு ஆதிக்கம் இனிப்பது சற்றுத் தெளிவு பெற வேண்டும். இதுவரை ஒரே போர்முனை; இப்போது இரண்டுமுனை திராவிட நாடு தனியாட்சி பெறும் வரை திராவிடரின் உணர்ச்சியை யாருமே அழிக்கமுடியாது. திராவிட முன்னேற்றக் கழகத்திற்கு இலட்சியந்தான பெரிது.

வரவேற்பு சரி! வறுமை தீருமா?

நம் நாட்டு நிலைமை வழங்க மறுக்கும் ஆதிக்க பீடத் தலைவர் பண்டித நேரு அமெரிக்காவில் அமோக வரவேற்பால் உளம்பூரித்திருக்கிறார். அதைக் கண்டு நாம் பெருமைப்படுகிறோம். ஆனால், அந்த வரவேற்பால் நம் நாட்டு வறுமை தீருமா? நேருவின் அமெரிக்கப் பிரயாணத்தால ஏற்படுகிற விளைவு போகப்போகத் தெரியத்தான் போகிறது. இன்று நாங்கள் கூறினால் காங்கிரஸ் தோழர்கள் தவறுதலாகக் கருதக்கூடும் காலத்தில் வர வர நெருக்கடியை உண்டாக்கி வருகிறது. விலைவாசிகள் விஷம்போல் ஏறுகிறது நமது நாட்டுக்குப் பலகொடுமைகள் செய்யப்படுகின்றன; இதைக் கேட்கும் நம மீது அடக்குமுறை வீசப்படுகிறது இவைகளையெல்லாம் ஒழிக்கத் திராவிட முன்னேற்றக் கழகம் ஆவன செய்யும்; அந்நேர்ப்பட்ட முயற்சிக்குப் பொது மக்களும், மாணவர்களும், முற்போக்கு எண்ணமுள்ளவர்களும் தொழிலாளர்களும் ஆதரவுதர வேண்டுகிறேன்"—என்று உணர்ச்சியாக 1-30 மணி நேரம் பேசினார்.

பிறகு பட்டுக்கோட்டைத் தோழர் இளவரியும், சென்னை புலவர் அழகுவேலன் அவர்களும் சிறிது நேரம் பேசினார்கள். தோழர் இளங்கோ முடிவுரையாக, நமது நாட்டுத் தூதுவர்கள் வெளிநாடுகளில் நம்முடைய பணத்தை விரயம் செய்வதை ஆதாரத்தோடு எடுத்துக்காட்டிப் பேசிய்தோடு முன்னேற்றக் கழகத்தில் அங்கத்தினர்களாகச் சேரவேண்டிய அவசியத்தைப் பற்றியும் பேசி முடித்தார். தோழர் சதாசிவம் நன்றி கூறக் கூட்டம் இரவு 10 மணிக்கு இனிது முடிந்தது.

நாட்டு நடப்பு

தி. மு. இளைஞர் மன்றம்

ஒரத்தநாடு, நவ. 4—

இவ்வூர் திராவிட முன்னேற்ற இளைஞர் கழகத்தின் செயற்குழுக் கூட்டம் 3—11—49ல் நடைபெற்றது. அதுபோது கீழ்க்கண்ட செயற்குழு அமைக்கப்பட்டது. செயலாளர்கள்.—க. இலக்குவன் வீ. இராமசாமி, கந்தசாமி. பொருள் உறுப்பினர்கள் பட்டீசுவரம். எஸ். கல்யாணசுந்தரம், சா. விசுவலிங்கம். எட்டு பேர் கொண்ட ஏனைய செயலுறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். (செ-ச)

• • •

வர்த்தகத் தொழிலாளர் கூட்டம்

முத்துப்பேட்டை, நவ. 7—

இவ்வூர் வர்த்தகத் தொழிலாளரின் பொதுக் கூட்டமொன்று 6—11—49ல் நடைபெற்றது. அதுபோது, தொழிற் சங்கத் தலைவர்களை விடுதலை செய்யும்படி கோரியும், அ. இ. கோ. கா. தீர்மானப்படி பாதுகாப்புக்கைதிகளின் குடும்பங்களுக்கு நிதி வசூலித்துக் கொடுப்பதாகவும், ஷாப் சட்டம் சரிவர அமுல் நடக்காததைக் கண்டித்தும தீர்மானங்கள் நிறைவேற்றப் பட்டன. (ஒ-சி)

* * *

கொலைவழக்கில் எதிரிகள் விடுதலை

கடலூர், நவ. 8—

7—11—49ல் தென்னாற்காடு ஜில்லா செஷன்ஜட்ஜ், சுவரப்பட்டு கோவிந்தசாமி வாண்டையார் மகன் திருஞானம் இறந்து போனது சம்பந்தமான கொலை வழக்கில், எதிரிகளான, குஞ்சிதபாதபூபதியார், அபிமன்பூ கிருஷ்ணசாமி, முருகேசன், அமிர்தலிங்கம் ஆகிய ஐவரையும் விடுதலை செய்தார். 1 முதல் 3 எதிரிகள் வண்டியை வழிமறித்து சுட்டுக் கொலை செய்ததாகவும், வண்டியிலிருந்தவர்களைக் கொலை செய்ய எத்தனித்ததாகவும் இ. பி. கோ 302-34 & 307-34 பிரிவுபடியும் 4-5 எதிரிகள் ஒருவாரத்துக்குமுன்பு கொலை செய்யச் சதி செய்ததாக இ. பி. கோ. 302 & 109 செக்ஷன் படியும் குற்றஞ்சாட்டப்பட்டது. (சு. கி.)

* * *

பரதவர் மகாஜன சங்கம்

சென்னை, நவ. 8—

சென்னையில் 5-11-49-ல் நடைபெற்ற தமிழக எல்லை மாநாட்டுத் தலைவர் டாக்டர் ஆர். கே. சண்முகம் அவர்கள் கொண்டுவந்து நிறைவேற்றிய தீர்மானமாகிய, "தமிழ் மாகாண அரசியல் நிர்வாகம் தமிழிலேயே நடைபெற வேண்டும்." என்பதையும், தமிழகத்தின் எல்லைகளையும் நிர்ணயித்து, தமிழ் மாகாணம் புதிய அரசியலமைப்பு அமல் வெளிவருவதற்குமுன்பே ஏற்பட்டாக வேண்டுமென்ற தீர்மானத்தையும் இக்கழகம் மனப்பூர்வமாக ஆதரிப்பதாக அறிவிக்கப்படுகிறது.

• • •

தமிழ்த் தொண்டர் கழகம்

கோவை, நவ. 5—

இன்று காலை 11 மணிக்கு மதுரை மாவட்டத் தமிழ்த்தொண்டர் கழகச்செயற்குழுக் கூட்டம் தோழர் க. சண்முகசுந்தரம் தலைமையில், உத்தமபாளையம் நியாசுராசா நூல்நிலையக் கட்டடத்தில் நடைபெற்றது. சென்ற ஆண்டின் வரவு செலவுக்கணக்குகள் படித்து ஒப்புக்கொள்ளப்பட்டன. புதிய ஆண்டிற்கு கோம்பை க. சண்முகசுந்தரம் தலைவராகவும், உத்தமபாளையம் ஜனாப் உசேன்மீர் தாணா துணைத்தலைவராகவும், பெரியகுளம் வித்துவான் சிவக்கொழுந்து, தேனி வித்துவான் தி. கி. சுந்தரமூர்த்தி செயலாளர்களாகவும், வித்துவான் கி. இராமசாமி பொருளாளராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். மற்றும் பல தாலுகாக்களைச்சேர்ந்த 16 பேர்கள் செயற்குழு உறுப்பினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர். "வாழ்க்கையின் போக்கும் வள்ளுவர் வாக்கும்" என்ற தலைப்பில் பத்துத் திருக்குறட்பாக்களை விளக்கும் வசலாறுகள் கொண்ட சிறு நூலை வெளியிடுவதெனவும், கழகத்தின் ஆண்டு விழாவை தைத்திங்களில் தேனியில் நடத்துவதெனவும், தோழர் அவினாசிலிங்கம் அவர்களையும், திருச்சி தோழர் கி. ஆ. பெ. விசுவநாதம் அவர்களையும் அழைப்பதெனவும் முடிவுசெய்யப்பட்டது. "வாழ்க்கையின் போக்கும் வள்ளுவர் வாக்கும்" என்ற நூலை வெளியிட பொருளுதவி புரிந்த ராயப்பன்பட்டி. மு. சவரிமுத்து சகோதரர்களுக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது.

சென்னை தமிழ் நாட்டுடன் சேர்ந்ததே என தெளிவாகத் தெரிவிக்குமாறு இந்திய அரசாங்கத்தையும், அரசியல் தலைவர்களையும் கேட்டுக்கொண்டும், தமிழ்நாட்டு உயர்நிலைப்பள்ளிகளிலே தமிழுக்கு முதன்மை தரப்பட்டுள்ளது, என்று அரசாங்கம் வெளியிட்ட அறிக்கை நடைமுறைக்கு வாராததை எடுத்துக் காட்டியும், இனிமேலும உயர்நிலைப் பள்ளி மாணவர்கள் அனைவரும் கட்டாயம் தமிழ் கற்க வேண்டும், கட்டாயம் இந்தி கற்கவேண்டுமென்ற திட்டத்தை எல்லாப் பள்ளிக்கூடங்களிலும் நடைமுறைக்குக் கொண்டுவர நடவடிக்கைகள் எடுத்துக் கொள்ளுமாறு கல்வி இலாகாவைக் கேட்டுக்கொண்டும் மற்றும் பல தீர்மானங்களும் நிறைவேறப்பட்டன. (ஒ-சி)

* * *

அனுதாபம்

சென்னை, நவ. 9—

கடந்த 6—11—49 ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற போட்டிக்குத் துச் சண்டையினால் தென்னாட்டுக் குத்துச் சண்டை வீரர் தோழர் எஸ். ஏ. அருணாசலம் அவர்களுக்கு ஏற்பட்ட அகால மரணம் மிகவும் வருந்ததக்கது. அவர் குத்துச் சண்டை உலகில் ஓர் மணிபோலத் திகழ்ந்தார், நல்ல நுணுக்கம் அறிந்தவர், திறன் பெற்றவர், சார்பட்டா பரம்பரைக்கு நல்ல புகழ் தேடிக் கொடுத்த இளைஞர்களுள் ஒருவர். இவர் பிரிவு குறித்து மிக்கத் துயரும் இவர் குடும்பத்தார்க்கும் சார்பட்டா பரம்பரைக்கும் நண்பர் முதலியவர்களுக்கும் என் இரங்கலை அன்புடன் தெரிவித்துக் கொள்ளுகிறேன் எனத் தோழர் எம். கே. முத்து எழுதுகிறார்.

திராவிட முன்னேற்றக் கழகங்கள்

சித்தோடு—சிற்றூர்க் கிளை

சித்தோடு, நவ. 2—

இவ்வூர் தி. மு. க. அமைப்புக் கூட்டம் 1-11-49-ல் தோழர் எம். ராசமாணிக்கம் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அதுபோது "திராவிட முன்னேற்றக் கழகம்—சித்தோடு சிற்றூர்க் கிளை" திறவப்பட்டுக் கீழ்க்கண்ட செயற்குழுத் தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்:—எம். ராசமாணிக்கம்; துணைச் செயலாளர்:—கே. சென்னியப்பன்; பொருள் உறுப்பினர்:—கே. என். ஆறுமுகம்; விளம்பர உறுப்பினர்:—என். முத்துசாமி. ஏனைய செயற்குழுவினர்:—எ. மாணிக்கம், எஸ். வெங்கடாசலம், எ. வடிவேல். பின்பு ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டுக் கூட்டம் முடிவுற்றது. (செ-ர்)

* * *

பர்கூர்—சிற்றூர்க்கிளை

பர்கூர், நவ. 2—

சேலம் மாவட்டம், பர்கூர் தி. மு. க. ஆதரவாளர்கள், தோழர் தங்கவேல் அவர்கள் இல்லத்தில் 1-11-49 அன்று கூடி, "திராவிட முன்னேற்றக் கழகம்—பர்கூர் சிற்றூர்க் கிளை" அமைத்தனர். கீழ்க்கண்ட செயற்குழுவும் தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்—எஸ். ராமச்சந்திரன்; துணைச் செயலாளர்— பி. டி. வி. பொருள் உறுப்பினர்— ஆ. கோவிந்தராசன்; விளம்பர உறுப்பினர்—எல். எஸ். இளங்கோ, ஏனைய செயலுறுப்பினர்கள்—வெ. ராமசாமி, ஹரிஹரராவ், வெ. சுப்பன், கே. சென்னையன், டி. ராமமூர்த்தி, எஸ். ராமசாமி, எம். கே. சாமி, டி. எஸ். ராஜகோபால். பின்பு சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுக் கூட்டம் முடிவுற்றது. (வி-உ)

* * *

நாட்டுச்சாலை— சிற்றூர்க்கிளை

நாட்டுச்சாலை, நவ. 3—

பட்டுக்கோட்டை தாலுகா, நாட்டுச்சாலை திராவிடர் கழகத்திலிருந்து விலகியவர்கள், 16-10-49ல் தோழர் எ. எஸ். ராமசாமி அவர்கள் தலைமையில் கூடி, "திராவிட முன்னேற்றக் கழகம்—நாட்டுச்சாலை சிற்றூர்க் கிளை" திறவினர். பின்பு ஓர் புதிய செயற்குழுவும் அமைக்கப்பட்டது.

செயலாளர்— எம். சுவாமிநாதன்; துணைச் செயலாளர்—வி. பி. ரெங்கசாமி; பொருள் உறுப்பினர்— கே. எம். உத்தையா; விளம்பர உறுப்பினர்— எ. எஸ். ராமசாமி. ஏனைய செயலுறுப்பினர்கள்— பி. நமசிவாயம், ஆர். ராமசந்திரன், டி. திருமேனி, டி. வைத்தியலிங்கம், சி. அருணாசலம், வி. சற்குணம், ஆர். வீரப்பன். பிறகு சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுக் கூட்டம் முடிவுற்றது. (வி-உ)

• • •

வடக்கப்பட்டு—சிற்றூர்க்கிளை

வடக்கப்பட்டு, நவ. 4—

வ. ஆ. மாவட்டம் வடக்கப்பட்டு தி. மு. க. அமைப்புக்கூட்டம் 30—10—49ல் தோழர் வி. என். நாதப்பன் அவர்கள் இல்லத்தில் நடைபெற்றது. அதுபோது "திராவிட முன்னேற்றக் கழகம்—வடக்கப்பட்டு சிற்றூர்க்கிளை" திறவப்பட்டுக் கீழ்க்கண்ட செயற்குழு அமைக்கப்பட்டது.

செயலாளர்:— வி. கே. கோபால்; துணைச்செயலாளர்:— கே. சுப்பிரமணியம்; பொருள் உறுப்பினர்:— வி. சுப்பிரமணியம்; விளம்பர உறுப்பினர்:— வி. என். வஜ்ஜிரம், ஏனைய செயற்குழுவினர்— கந்தசாமி, அப்பாசாமி, ராமசாமி, துரைசாமி, பெருமாள், பி. கோபால், வி. என். தங்கவேல், வி. என். தனபால். மேலும் சிலரைச் சேர்த்துக் கொள்ள செயலாளருக்கு உரிமை வழங்கப்பட்டது. (வி-உ)

* * *

எக்லாஸ்புரம் சிற்றூர்க்கிளை

எக்லாஸ்புரம், நவ. 4—

வ. ஆ. மாவட்டம், எக்லாஸ்புரம் தி. மு. க. அமைப்புக்கூட்டம் 30-10-49ல் தோழர் டாக்டர் சுப்ரமணியம் அவர்கள் இல்லத்தில் நடைபெற்றது. தோழர் வி. என். நாதப்பன் தலைமைவகித்தார். அதுபோது, "திராவிட முன்னேற்றக்கழகம்—எக்லாஸ்புரம் – சிற்றூர்க்கிளை" திறவப்பட்டு, பின் வரும் செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்:—இ. எல். வேணுகோபால்; துணைச்செயலாளர்:— வி. என். ஜானகிராமன்; பொருள் உறுப்பினர்:—இ. எ. லட்சுமணன்; விளம்பர உறுப்பினர்:— டாக்டர் வி. என். சுப்பிரமணியம். ஏனைய செயற்குழுவினர்கள்:- இராசதுரை, தேவராசு, மாசிலாமணி, கோவிந்தன், வி. மாசிலாமணி, இராசாமணி. (வி-உ)

* * *

மணம்பூண்டி—சிற்றூர்க்கிளை

மணம்பூண்டி, நவ. 4—

திருக்கோவலூர் தாலுகா, மணம்பூண்டி திராவிடர் கழகக்கூட்டம் 30—10—49ல் நடைபெற்றது. அதுபோது டி திராவிடர் கழகம், "திராவிட முன்னேற்றக்கழகம்—மணம்பூண்டி சிற்றூர்க்கிளை" என மாற்றியமைக்கப்பட்டது. அமைப்பாளர் தோழர் குமார தணிகாசலம் அவர்களால் தி. மு. க. கிளை அமைத்துத் தரப்பட்டது. பழைய செயற்குழுவினரே புதிய செயற்குழுவினராகத் தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

செயலாளர்:-எம். கே. கோவிந்தசாமி; துணைச் செயலாளர்:—எம். டி. ராஜு; பொருள் உறுப்பினர்:- எம். பாஸ்கரன்; ஏனைய செயலுறுப்பினர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். தோழர் எம். கே. நடராசன் ஆலோசகராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். பின்பு தி. மு. க. கொடி ஏற்றுவதென முடிவு செய்யப்பட்டுக் கூட்டம் முடிவுற்றது. (அமைப்பாளர்)

• • •

தனுஷ்கோடி—நகரக்கிளை

தனுஷ்கோடி, நவ. 4—

இவ்வூர் தி. மு. க. அமைப்புக் கூட்டம் 3-11-49 அன்று தோழர் ஆர். அப்துல் கரீம் அவர்களின் மாடியில்; தோழர் டி. இராமநாதன் தலைமையில் நடைபெற்றது. அதுபோது, தோழர் மீனாட்சிசுந்தரம் தி. மு. க. கொடியை ஏற்றிவைத்துப் பேசினார். பின்பு தோழர் அப்துல் வகாப் தி. மு. கழகத்தின் கொள்கைகளை விளக்கிப் பேசினார். பிறகு, "திராவிட முன்னேற்றக் கழகம்—தனுஷ்கோடி நகரக்கிளை" திறவப்பட்டு, கீழ்க்கண்ட செயற்குழு ஒன்று தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்— எஸ். எம். முகம்மது காசிம்; துணைச்செயலாளர்— எம். பசுசையப்பன்; பொருள் உறுப்பினர்— ஆர். அப்துல்கரீம்; விளம்பர உறுப்பினர்- இ. மாசிலாமணி, மற்ற செயலுறுப்பினர்கள்— எல். ரெங்கன், எம. பழனிச்சாமி, கரு. சுப்பையா, கோ. கிருட்டினன், த. இராமநாதன், இ. கு. மு. முஸ்தாபா, பி. இலட்சுமணன், எஸ். சேக்இப்ராஹிம். பின்பு சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுக் கூட்டம் முடிவுற்றது. (வி-உ)

* * *

வீரநாராயணமங்கலம்—சிற்றூர்க் கிளை

வீரநாராயணமங்கலம், நவ. 4—

நாஞ்சில்நாட்டைச் சேர்ந்த வீரநாராயணமங்கலம் திராவிட இயக்க அனுதாபிகளின் கூட்டம் ஒன்று 3-11-49-ல் தமிழர் நூல் நிலையத்தில் கூடியது. தோழர் சு. சிவசுப்ரமணியம் கூட்டத்திற்குத் தலைமை வகித்தார். அதுபோது சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டு, 'திராவிட முன்னேற்றக் கழகம்—வீரநாராயண மங்கலம் சிற்றூர்க்கிளை' திறவப்பட்டது. பிறகு கீழ்க்கண்ட செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்:—வீ. ஆ. காளு காசன்; துணைச்செயலாளர்:—செ. சோணாசலம்; நிதி உறுப்பினர்:— ம. சுடலையாண்டி; விளம்பர உறுப்பினர்:—சு. இராமலிங்கம்.

ஏனைய செயற்குழுவினர்.— ப. ஆறுமுகம், ஆ. அழகப்பன், சோ. சுப்பையன், கோ. சிவதாணு, மீ. சுப்பையன், ஆ. மகாராஜன். (வி-உ)

* * *

காமய கவுண்டன்பட்டி—சிற்றூர்க்கிளை

கா. கவுண்டன்பட்டி, நவ. 6—

5-11-49ல் தோழர் கே. எ. கலையமுதன் அவர்கள் தலைமையில் நடைபெற்றக்கூட்டத்தில், "திராவிட முன்னேற்றக் கழகம்-காமய கவுண்டன்பட்டி சிற்றூர்க்கிளை" திறவப்பட்டது. அதுபோது கீழ்க்கண்ட செயற்குழுவும் தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்:—வெ. இரா. கலைப்பிறை; நிதி உறுப்பினர்:—க. இரா. நல்லரசு. ஏனைய செயலுறுப்பினர்கள்:—அ. நற்குறி, கு. அழகரசு, அ. திருமாறன், வீ. பொன்முத்து; வெ. சுருளி, அ. பொன்னரசு, சுருளி, அ. இளமுருகு, கு. முருகு, பெ. அய்யர்; கனகசபாபதி, சு. இராமசாமி, க. வெள்ளைச்சாமி. பின்பு சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுக் கூட்டம் முடிவுற்றது. (வி-உ)

* * *

தேவதானம்—சிற்றூர்க்கிளை

தேவதானம், நவ. 7—

இவ்வூர் திராவிடர் கழகக் கூட்டம், தோழர் ஆ. பரமசிவம் தலைமையில் 6—11—49ல் நடைபெற்றது. அதுபோது, திராவிடர் கழகம் "திராவிட முன்னேற்றக் கழகம்—தேவதானம் சிற்றூர்க்கிளை" என (முழு மனதுடன்) மாற்றியமைக்கப்பட்டது. பின்பு ஓர் புதிய செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்— கே. சோமசுந்தரம்; பொருள் உறுப்பினர்— ஏ. மாணிக்கம்; விளம்பர உறுப்பினர்- எஸ். மாரியப்பன். ஏனைய செயற்குழுவினர்—ஆர். பெரியாண்டவன், எஸ். மதுரைப்பாண்டியன், பி. செல்லையா. மேலும் சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுக் கூட்டம் முடிவுற்றது. (வி-உ)

* * *

நாமக்கல்—நகரக்கிளை

நாமக்கல், அக். 31—

30—10—49 அன்று சேந்தமங்கலம் ரோடு தோழர் ஜி. சந்நாசாயபு அவர்கள் இல்லத்தில், தோழர் நல்லுசாமி அவர்கள் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் "திராவிட முன்னேற்றக் கழகம்—நாமக்கல் நகரக்கிளை" திறவப்பட்டுக் கீழ்க்கண்ட செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

செயலாளர்— கா. பெருமாள்; துணைச் செயலாளர்—ஆனைமுத்து; நிதிஉறுப்பினர்-கே. எம். கந்தசாமி; விளம்பர உறுப்பினர்-பி. நாராயணசாமி. ஏனையசெயலுறுப்பினர்கள்- வீரப்பன், குப்புசாமி, இராசித்சாயபு, சர்தார்சாயபு, என். இராமசாமி, என். எ. சுப்பிரமணியம், பாபு. பின்பு சில தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டுக் கூட்டம் முடிவுற்றது. (வி-உ)

குறிப்பு:—வெளியூர் 1-11-49 "மாலை மணி"யில் தி. மு. கழகங்கள் என்ற தலைப்பில் வெளிவந்துள்ள "நாமக்கல்-நகரக்கிளை" என்ற தலைப்பை "சந்தைப்பேட்டைப் புதூர்கிளை" யென திருத்தி வாசிக்கவும். (ஆ-ர்)

முத்தியாலுபேட்டை திருவள்ளுவர் இளைஞர் கழகம்

நாணய மதிப்பு குறைவு பற்றி சொற்போர்

சென்னை, நவ 6—

முத்தியாலுபேட்டை திருவள்ளுவர் இளைஞர் கழக ஆதரவில் "நாணய மதிப்பு குறைவு" பற்றி விவாதம் ஒன்று மிகுந்த உயர்தரமான முறையில் நடைபெற்றது. தோழர் ஜி. முத்து பி. எ. தலைமை வகித்தார்.

தோழர் சோ. குமாரசாமி நாணய மதிப்புக் குறைவை ஆதரித்துப்பேசுகையில் நாணய மதிப்பு, நாணய மாற்றுப் பதிப்புஎன்பவைகளைப்பற்றிவிளக்கமாகக் கூறி, பிரிட்டனை பின் பற்றி எல்லா ஸ்டர்லிங் நாடுகளும் தங்கள் நாணய மாற்று மதிப்பை குறைத்துக் கொண்ட படியாலும், இந்தியாவின் ஏற்றுமதி, இறக்குமதி வர்த்தகம் ஒழுங்காக நடைபெறுவதற்கு ஸ்டர்லிங் நாடுகளை ஒட்டிப் போக வேண்டியிருப்பதாலும் ரூபாயின் டாலர் மதிப்பைக் குறைக்காமல் ஸ்டர்லிங் மதிப்பைக் குறைத்திருந்தால் இந்தியாவின் உள்நாட்டு வர்த்தகத்திற்கே கேடு ஏற்படுமென்பதாலும், அதிகப்படியான டாலர் சம்பாதிப்பதற்கு ஏற்றுமதி வர்த்தகம் அதிகஅளவில் நடக்கவேண்டியிருப்பதாலும் இந்தியா தன் ரூபாயின் டாலர் மதிப்பைக்குறைத்துக் கொண்டது அவசியமும் நன்மையுமாகும் என்று கூறினர்.

அடுத்துப் பேசிய தோழர் ஜி திருஞானம் பி. எ., "இந்தியாவின் இறக்குமதி வர்த்தகம் பல கண்ட்ரோல் உபாயங்களால் கட்டுப்பாடு செய்யப்பட்டு வரும்போது, நாணய மாற்று குறைவு வழியைப் பின்பற்றி டாலர் பிரதேசத்திலிருந்து இறக்குமதியை இறக்கவேண்டிய நிர்ப்பந்தம் இல்லை. ரூபாயின்டாலர் மதிப்பு குறைவினால் உடனடியாக நம் ஸ்டர்லிங் சேமிப்பு நிதி பெரிதும் பாதிக்கப்படும். பிரிட்டனின் நாணய மதிப்புகுறைவு நடவடிக்கையானது நமக்கு நியாயமாகத் தரவேண்டிய ஸ்டர்லிங் கடனை மறைமுகமாகக் குறைப்பதற்கு கையாண்ட குறுக்கு வழியாகும் நம் நாட்டின் உற்பத்திச் சாலைகளை அபிவிருத்தி செய்யவும், புதியவைகளை நிர்மாணிக்கவும் உத்தேசித்துள்ள இந்த நேரத்தில் நம் நாட்டிற்குக் கடின நாணய மதிப்பே மிகச் சிறந்தது. இச்செய்கையால் இந்தியாவின் மூலப்பொருள்கள் அமெரிக்காவிற்கு அதிக அளவில் ஏற்றுமதியாகக்கூடும். இந்த ஏற்றுமதி அதிகரிப்பினால் உள்நாட்டுத் தேவை கவனிக்கப்படாமல் அலட்சியம் செய்யப்படுவதற்கும், விலை உயர்ந்து கருப்பு மார்க்கட் ஏற்படவும் ஏதுவாகிவிடும். நாணய மாற்றுக் குறைப்பினால் அமெரிக்க நாட்டுப் பொருள்களைத்தான் அதிக விலைக்கு வாங்க நேரிடும் என்றும், நம் தேவைகளை ஸ்டர்லிங் நாடுகளிலிருந்து குறைந்த விலைக்கு பெறமுடியும் என்றும் கூறுகிறார்கள். இது முற்றிலும் தவறான கருத்தாகும். ஸ்டர்லிங் நாட்டுப் பொருள்களையும் இப்போதைய விலையைவிட அதிகமான விலை கொடுத்தே வாங்க வேண்டியிருக்கும். இப்படிப்பட்ட கஷ்டங்களையும் நஷ்டங்களையும் மக்கள்தான் அனுபவிக்க நேரிடும். குறிப்பாகத் தொழிலாளத் தோழர்களின் வாழ்க்கையும் பெரிதும் சோதிக்கப்படும். வாழ்க்கைச் செலவு அதிகரித்தே நிற்கும். இந்த நாணய மதிப்புக் குறைவினால் ஏற்படும் பல கெடுதல்களையும் ஆராய்ந்து இந்திய சர்க்கார் தக்க நடவடிக்கைகள் எடுக்கவேண்டியது அவசியமாகும்" என்று கூறி நாணய மதிப்பு குறைப்பு அவசியமற்றது எனவும் கெடுதல் பயப்பது எனவும் எடுத்துக்காட்டினர்.

பிறகு பல தோழர்கள் ஆதரித்தும் எதிர்த்தும்பேசினர். பிரசினை ஓட்டிற்கு விடப்பட்டது. பெருவாரியான தோழர்கள் "நாணய மதிப்புக் குறைவு" அவசியமில்லை என ஓட்டளித்தனர். செயலாளர் நன்றி கூறக்கூட்டம் இனிது முடிந்தது. (ஒ-வி)

அரிசிக்குப் பதில் தழையைத் தின்னுங்கள்!

மைசூரில் உள்ள மத்திய உணவு ஆராய்ச்சி நிலையத்தார், அரிசிக்குப் பதிலாக, கோதுமை சோளம் ஆகிய தானியங்களை அரிசிபோல வடிவமாக்கிச் செயற்கை அரிசி செய்து கொள்ளலாமென்று முடிவு செய்திருக்கின்றனர். அதனுடன், அரிசி உணவுக்குப் பதிலாக 5 சதவிகிதம் வரை, மாடுகளுக்குத் தீனியாகப் பயன்பட்டுவந்த 'அலபாலீ' தழைகளைப் பயன்படுத்துவது நல்லதென்றும், இத் தழையில் உணவுச் சத்து அதிகமாயிருக்கிறதென்றும், அரிசியை விட 3 மடங்கு அதிகச் சத்துள்ளதென்றும், விலைசகலும் அதிகமென்றும், எனவே, இத் தழையை மக்களனைவரும் உணவாகக் கொண்டால், உணவுப்பஞ்சம் தீருமென்றும், அதேபோல நிலக்கடலையிலிருந்து செயற்கைப் பால் தயாரிக்கலாமென்றும் கண்டுபிடித்து அவற்றின் பெருமையை விளக்குகின்றார்கள். எனவே, இனி மக்கள் அரிசிக்குப் பதில் தழைகளையும், பாலுக்குப்பதில், நிலக்கடலைகளையுமே தின்னலாம். இன்னும் இவற்றைச் சமைக்காமல், பால் பிழியாமல் அப்படியே சாப்பிடுவதென்றால் வாழ்க்கை இயற்கையோடியைந்ததாக அமைந்து பெருமையுறும் என்றும் அவர்கள் பிரசாரம் செய்தால் கூட நன்றாக இருக்கும்!

"இந்தியரே இப்படிச் செய்யலாமா?"

கடந்த 9-ந்தேதி யன்று லண்டன் நகரில் லண்டனில் இந்தியா அவையில் [illegible] பேசுகையில், மூன்று இந்தியர் (லண்டனில் வசிப்பவர்) நேரு எதிர்ப்பு தொடர்கள் பொறித்த அட்டைகளேந்தி அங்குச் சென்று, "நேரு ஒழிக" என்று ஒலியெழுப்பி, ஐந்து நிமிடநேரம் ஆர்ப்பாட்டம் செய்தனராம். இந்தியா அவை அதிகாரிகள் போலீசைக் கூப்பிடவேண்டிய நிலைக்கு ஆர்ப்பாட்டம் முற்றிவிட்டதாம்.

ஆர்ப்பாட்டக்காரர்கள் திரும்பியபின்னர், நேரு கூட்டத்தில் பேசுகையில், ஆர்ப்பாட்டக்காரர்களால் தனக்கொரு துண்டறிக்கைத் தரப்பட்டுள்ளதாகவும், இந்தியர்கள் இவ்வளவு 'கீழ்த்தரமாக' நடந்துகொள்வதா என்று கண்டித்தும் பேசினராம்.

உறவு வளர்கிறது!

அமெரிக்க செனட் சபையைச் சேர்ந்த நான்கு உறுப்பினர்கள் வரும் புதனன்று புதுடெல்லி வந்தடைகின்றனர். இவர்கள் இந்திய சர்க்காரின் விருந்தினராக சர்க்கார் மாளிகையில் தங்குவாராம். தென்கிழக்கு ஆசியாவைச் சேர்ந்த பலநாடுகளுக்கு இவர்கள் வருகைதருவர்.

Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press, 2/45, Muthumari Chetty Street, Madras-1.